நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYAPOOMI

පුදිය පුමි

சுற்று 04 நவெம்பர் 1997 சுழற்சி 16 பக்கம் 12 விலை ரூபா 10/=


## ஆடைத் தொழிற்சாலைகளில்!

ஆடை தைக்கும் தொழிற்சாலைகளில் மொத்தம் 77 ஆயிரம் பெண் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இளம் வயதுடைய இப் பெண் தொழிலாளர்கள் இரவு பத்துமணியிலிருந்து காலை ஆறு மணிவரையும் கூட வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். சனி, ஞாயிறு, போயா தினங்களிலும் வேலை வாங்கப்படுகின்றனர். நாள் முழுவதும் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படும் தொழிற்சாலைகள் அநேகம் உண்டு. பெரும்பாலான தொழிற்சாலைகளில் பெண்களுக்கான பிரசவ விடுமுறை வழங்கப்படுவதில்லை. அவர்களுக்கான சம்பளம் திருப்தியற்றவையாகும். அத்துடன் உணவகங்கள், மலசல கூட வசதிகள், மற்றும் நலன்பேண் அம்சங்கள் யாவும் மிகத் தாழ்ந்த நிலையிலேயே காணப்படுகின்றன. அதேவேளை ஆடை ஏற்றுமதி மூலம் நாட்டின் தொழிற்துறை உற்பத்தியின் 63 சதவீதம் வருவாய் கிடைக்கின்றது.

வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சி

முஸ்லீம்களுக்கு உள் அலகு

மலையக மக்களுக்கு உள்ளமைப்பு

புலிகளுடன் பேச்சு

# தீர்வின் அடிப்படைகளாக வேண்டும்!

இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை உள்ளடக்கிய அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்திற்கான ஆலோசனைகள் அறிக்கையாகப் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. இது பற்றி அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் தத்தமது கருத்துக்கள் ஆலோசனைகளை வழங்கி வருகின்றன. அதன் அடிப்படையில் ஆதரவு, எதிர்ப்பு, கண்டனம், நிராகரிப்பு, போதாமை, நீக்க வேண்டியவை, சேர்க்க வேண்டியவை என்றெல்லாம் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இவ்வேளையில் புதியபூமி தனது கருத்துக்களை முன்வைத்துக்கொள்கின்றது.



முன்வைக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு வரைவானது இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்ததாகக் கூறப்படும் ஐம்பது ஆண்டு காலப்பகுதியில் முன்வைக்கப்படும் மூன்றாவது அரசியலமைப்பாகக் காணப்படுகிறது. இதனால் இலங்கையின் சமூகக் கட்டமைப்பில் எவ்விதமான பாரிய மாற்றமும் ஏற்படப் போவதில்லை. ஏற்றத்தாழ்வும் சுரண்டலும் அடக்குமுறையும் சமூக அநீதிகளும் ஒழிந்து கொள்ள மாட்டாது. ஜனநாயகம் சுதந்திரம் மனித உரிமைகள் உட்பட அனைத்து அம்சங்களும் எழுத்தளவில் இதுவரை இருந்தது போன்று இருக்குமே தவிர நடைமுறையில் ஏகப் பெரும்பான்மையான இலங்கை மக்களுக்கு அதனால் எதிர்பார்க்கக் கூடிய எவ்வித பலாபலன்களும் கிடைக்க மாட்டாது.



அதேவேளை இவ் அரசியலமைப்பு வரைவில் இன்று யுத்தமாகி நிற்கும் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அத்தகைய தீர்வு அம்சம் அதிக கவனத்தைப் பெற்று நிற்கிறது. அரசாங்கமும் அதன் ஆதரவாளர்களும் மேற்படி தீர்வுத்திட்டம் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்கிறது என்றும் அதன் மூலம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்படும் எனவும் தீவிர பிரசாரத்தில் இறங்கி உள்ளது.

ஆனால் சிங்கள ஆணைக்குழு என்பதன் ஊடே அணிசேர்ந்துள்ள இனவெறியும் மதவெறியும் கொண்ட பேரினவாதிகள் அத்தீர்வுத்திட்டத்தை கர்ணகடூரமாக தாக்கி எதிர்த்து வருகின்றனர். அவர்களோடு நேரடியாகத் தம்மை இணைத்துக்கொள்ளவிடினும் ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஏனைய இனவாதக் கட்சிகளும் தீர்வுத்திட்டத்தை எதிர்ப்பதில் தமது இனவெறிச் சுயரூபத்தை வெளிக்காட்டி வருகின்றனர். தமிழ் அமைப்புகள் தளப்ப குழப்ப நிலையைக் கொண்டிருப்பினும் மனப்பூர்வமாக அத்தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொள்வதாக இல்லை. அவை மாற்றங்களையும் சேர்ப்புகளையும் கோரி நிற்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் இத்தீர்வுத்திட்டத்தை தமிழ்த் தேசிய இனத்தை அழிவுக்கு உள்ளாக்கும் தீர்வுத்திட்டமாகவே கருதிக் கொள்கிறார்கள். அரசாங்கத்தினுள் அங்கம் பெறும் இடதுசாரிகள் அதனை ஆதரித்து நிற்கிறார்கள்.

அரசாங்கத்திற்கு வெளியில் உள்ள இடதுசாரிகள் கடுமையான விமர்சனத்துடன் அதனை நோக்கி தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுத்திட்டம் ஒன்றையே வற்புறுத்துகிறார்கள்:

தொடர்ச்சி பக்கம் 11இல்

## தோட்டக் கம்பனிகளின் ஈபிஎவ் மோசடி!

## தொழிற் திணைக்களம் தூக்கமா?

மலையக தோட்டத் தொழிலாளர்களின் சேமலாபநிதியை முறைப்படி வங்கியில் வைப்பிலிடாமல் தோட்டத் தனியார் கம்பெனிகள் மோசடி செய்து வருகின்றனர். இதனால் சேமலாப நிதியொன்றையே சேமிப்பாக நம்பிக் கொண்டிருக்கும் தோட்டத் தொழிலாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இலங்கையின் சேமலாப நிதி சட்டப்படி தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து ஒரு தொகையைப் பிடித்து அத்துடன் கம்பெனிகளும் ஒரு தொகையை சேர்த்து ஊழியர் சேமலாப நிதியில் மாதாந்தம் வைப்பிலிட வேண்டும். இதனை செய்ய மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து பிடித்த பணத்தையும் வைப்பிலிடாமல், தங்களது தொகையையும் வைப்பிலிடாமல் தோட்டங்களை நடத்தும் அதிகமான தனியார் கம்பெனிகள் தோட்டத் தொழிலாளர்களையும், சட்டத்தையும் ஏமாற்றி வருகின்றன.

சேமலாப நிதியை கம்பெனிகள் முறைப்படி வைப்பிலிடாமையை எதிர்த்து தோட்டத் தொழிலாளர்கள் பல போராட்டங்களை அண்மைக்காலமாக செய்துவருகின்றனர். அது பற்றி தொழிற்சங்கங்களுக்கும், தனியார் கம்பெனிகளுக்கும் பல பேச்சுவார்த்தைகளும் இடம் பெற்றுள்ளன.


தோட்டக் கம்பெனிகள் தொழிலாளர்களுக்குரிய சேமலாபநிதியை வைப்பிலிடாவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக கூறி தொழில் திணைக்களம் காலக் கெடுக்களையும் விதித்திருந்தது.

தொடர்ச்சி பக்கம் 11இல்

★ வாழ்க்கைச் செலவை அதிகரிக்கும்.

★ யுத்தத்திற்கு வாரி வழங்கும்.

## வரவு செலவுத் திட்டம்.



பொது சன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் நான்காவது வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வரவு செலவுத்திட்டத்தை ஜனாதிபதி இது ஒரு மக்கள் வரவு செலவுத்திட்டம் எனப் புகழ்ந்துள்ளார். அவ்வாறு அது புகழ்ச்சி பெறுவதற்கோ அல்லது வர்ணனை செய்வதற்கோ மக்களுக்கு எவ்வித வழிவகைகளையும் அவ் வரவு செலவுத்திட்டம் காட்டி நிற்கவில்லை. உடனடியாகவும் வெளிப்படையாகவும் மக்கள் மீது சுமைகளைச் சுமத்திக் கொள்ளாமல்

தொடர்ச்சி பக்கம் 11இல்

நன்றி - நூலகத்திட்டம்



### யாழ். போதனா மருத்துவமனையில் சோகச் சம்பவம்

# சிசு நிலத்தில் வீழ்ந்து மரணம்

ஒரு பிரசவத்தாய் அனுபவிக்கின்ற பிரசவ வேதனை என்னவென்பதையும் அனுபவ ரீதியாக அந்தத்தாய் பிரசவ நேரத்தையும் அறிந்து கொள்வதையும் விட தமக்குத்தான் அதிகம் தெரியும் என்பது போல நடந்து கொள்கின்றனர் யாழ் - போதனா மருத்துவ மனையின் தாதிமாரும் அட்டெண்டன்மாரும்.

இவர்களின் இத்தகைய பொறுப்பற்ற கவலையீனம் காரணமாக இப்பூவுலகில் புதுப் பொலிவுடன் ஜனனிக்க வேண்டிய பிஞ்சுக் குழந்தை பிறந்தவுடனேயே மரணிக்க நேர்ந்தது.

இந்த துயர சம்பவம் கடந்த 9ம் திகதி (09.10.97) யாழ் போதனா வைத்தியசாலையில் அரங்கேறியது. அன்றுமாலை 6.15 மணியிருக்கும் ஒரு கர்ப்பிணித்தாய் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வரப்படுகின்றார். தனது வேதனையை வெளிப்படுத்தி தன்னை பிரசவ அறைக்கு அனுமதிக்கும்படி அங்கு கடமையில் இருந்தவரிடம் தெரிவித்தார். பிரசவத்திற்கு நேரம் இருக்கின்றது நீர் அந்த வராந்தாவில் நடந்து திரியும் என்று பதில் அத்தாய்க்கு கிடைக்கின்றது. அந்தக் கர்ப்பிணித்தாய் நடந்து கொண்டிருந்தார். சில நிமிடங்களில் பிரசவம் நிகழப் போவதை அந்தத்தாய் உணர்ந்து கொண்டு பிரசவம் நிகழப்போவதாக கூறுகின்றார். ஆனால் அங்கு கடமையில் நின்றவர்களோ எதையும் காதில் வாங்கவில்லை. பழைய துணி எடுத்து வருமாறு பணிக்கப்படுகின்றார். அந்தத் தாயார் கூட நின்றவரை பழைய துணி எடுத்துவருமாறு கூறியபோது அவரையே பழையதுணி எடுத்து வருமாறு பணிக்கின்றார் கடமையில் இருந்த பெண் ஊழியர். பழைய துணி எடுத்து வர சென்ற அந்தக் கர்ப்பிணித்தாய் அங்கேயே நடைபாதையிலேயே குழந்தையைப் பிரசவிக்கின்றார். நின்ற நிலையில் நடந்த இப்பிரசவம் காரணமாக குழந்தை சீமேந்து நிலத்தில் தலைமோதுண்டு விழுகின்றது.

தலை மோதுண்ட சத்தம் தனக்குக் கேட்டதாக அந்தத்தாய் கூறுகின்றார். குழந்தை அந்தவிடத்திலேயே மூர்ச்சையானது. போதாதற்கு அவ்விடத்தில் வைத்தே பிரசவப் பணிகள் அங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

குழந்தையை சேமமாகப் பிரசவிப்பதற்கென்று யாழ் போதனா வைத்தியசாலைக்குள் காலடி எடுத்து வைத்த அந்தத்தாய் பிரசவித்த குழந்தை அவ்விடத்திலேயே மரணித்த சோகத்தில் வெறுமையாக வேதனையுடன் வைத்திய சாலையை விட்டு வெளியேறினார். இவ்வாறு யாழ் போதனா வைத்தியசாலையில் பிரசவ வார்ட்டில் பல பிரசவத்தாய்மார் பெரும் சிரமங்களையும் துக்க நிகழ்வுகளையும் சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இருந்து வருவதாக அங்கு பிரசவத்திற்கு சென்ற பல தாய்மார்கள் புகார் தெரிவிக்கின்றனர். இதுபோன்று ஏற்கனவே கவலையீனச் சிசு மரணங்கள் நடைபெற்றுள்ளன.

பிரசவ நிகழ்வின் போது தாயார் இயற்கையாகப்படும் கஸ்டங்கள் துன்பங்களுக்கு மேலதிகமாக அங்கு அந்நேரம் சேவையில் இருக்கும் தாதிமார் உதவித் தாதிமார் சிற்றூழியர்கள் சிலரின் வசை மொழிகளும் நோயாளரை சிரமப்படுத்தும் செயல்களும் அனந்தம். உதாரணமாக பிரசவ நேரம் நெருங்கும் தறுவாயிலும் நடைப்பயிற்சியில் இருந்து விடுபடுவது அங்கு கடமையில் இருக்கும் சேவையாளர்களின் மனநிலையைப் பொறுத்ததாகவே அமைந்து விடுகிறது.

பிரசவ வேதனையில் கஸ்டமுறும் ஒரு தாய் தன் நிலைஎய அங்கு கடமையில் இருப்பவர்களுக்கு தெரிவிக்கும் போது அவர்கள் பிரசவத்திற்கு நேரமிருக்கிறது அதுவரை சும்மா இருக்காது நடந்து கொண்டிருக்குமாறு கட்டாயப்படுத்தி நடக்க வைக்கின்றனர். நடக்கவைப்பது பிரசவத்திற்கு ஒரு சுகமாக பயிற்சியாக அமைவது உண்மைதான். ஆனால் பிரசவம் நிகழும் கடைசி நிமிடம் வரை தணடனை நடைபயிற்சி தேவையா? என்றே தாய்மார் பலரும் கேட்கிறார்கள்.

சுகப் பிரசவத்திற்கு என்று யாழ் போதனா வைத்தியசாலைக்கு வருகின்ற கர்ப்பிணித் தாய்மார் மீது அங்கு கடமையாற்றுகின்ற தாதியர் மற்றும் அட்டெண்டன்மாரின் அதிகார அட்டகாசமேலோங்கித்தனம் குறித்து வைத்தியாசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா? அல்லது யுத்தசூழல், வசதிக்குறைவு எனக்கூறி தாதியர், ஊழியர் சிலரின் அடாவடித்தனத்திற்கு துணைபோகுமா என்றே தாய்மார் கேட்கின்றனர்.

# பகிடி வதை - மற்றொரு கோணம்

செல்வநாயகம் வரப்பிரகாஷ் (21 வயது) சிரேஷ்ட மாணவர்களின் மனிதாபிமானமற்ற பகிடிவதையால் மரணித்துவிட்டார். இது போன்ற சம்பவங்கள் பல கடந்த காலங்களில் இடம் பெற்று முடிந்துவிட்டன. பல்கலைக்கழக பேராசிரியர்களும், உபவேந்தர்களும், ஏனோ ஒப்புக்கு வயிற்றிலடித்துக் கொள்கின்றனர். பல்வேறு மட்டங்களில் நிகழும் இந்த பகிடி வதைகளுக்கு மூலகாரணம் யார்? அரசே தான். மற்றவனை துன்புறுத்தி இன்பம் காணும் கலாசாரம் எங்கிருந்து வந்தது? 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' அதுதான் உண்மை.

### அரசின் பகிடிவதை

- சுட்டுக் கொலை செய்தல்
- உயிருடன் எரித்தல்
- கொன்று ஆற்றில் போடுதல்
- கடத்திச் செல்லுதல் (காணாமல் செய்தல்)
- அப்பாவிகள் மீது 'செல்' வீசுதல் குண்டுகள் போடுதல்
- கற்பழித்தல், யோனிக்குள் குண்டுவைத்து வெடித்தல்
- கற்பழித்து, மலசல கூடத்தில் போடுதல்.
- இரவு உடையுடன் அழைத்துச் சென்று கூட்டுக்குள் அடைத்தல்
- தூசன வார்த்தைகளால் ஏசுதல்
- அடி உதை கொடுத்தல்.
- குற்றப்பத்திரிகையை ஏற்கச் செய்தல்
- அடையாள அட்டை கேட்டு துன்புறுத்துதல்

இன்னும் ஆயிரமாயிரம்

### பல்கலைக்கழகம், கல்விக் கல்லூரிகள் ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள்

- உடல் ரீதியான, தண்டனைகள்
- காயப்படுத்துதல்
- தூக்கி எறிதல்
- பெண்களின் மார்பை தொட்டுப் பார்த்தல்
- தூசண வார்த்தைகளில் ஏசுதல்
- அடித்தல்
- சிகரெட் மது குடிக்க வைத்தல் இத்தியாதிகள்.

### பாடசாலைகள்

- உடல் ரீதியான தண்டனைகள்
- தூசண வார்த்தைகள்
- சிகரட், மது, குடிக்க வைத்தல்
- பணம் செலவழிக்க செய்தல் இன்னும் பல


### குடும்பம்

- குழந்தைகளைக் கற்பழித்தல்
- இளம் பெண்களை கற்பழித்தல்
- அடித்தல்
- தூசண வார்த்தைகளைப் பிரயோகித்தல்
- உடைகளைக் கிழித்தல்
- இவ்வரிசையில் மேலும் பல

எனவே பகிடி வதையினை அரசு முதலில் நிறுத்த வேண்டும். அப்போதுதான் அதனால் உருவாகியுள்ள மனவடுக்கள், உளவியற் சிக்கல்கள் மக்கள் மனதிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் அடுத்தவனை மனிதனாக மதிக்கும் பண்பாடு, எல்லா மட்டத்திலும் ஏற்பட வேண்டும்.

புதிய வாழ்வு, புதிய பண்பாடு, புதிய கலாசாரம் உருவாக, மக்கள் போராட வேண்டும். புதிய பண்பாட்டை உருவாக்கவல்ல அரசினை மக்கள் ஏற்படுத்த வேண்டும். அதை விடுத்து பல்கலைக் கழக மட்டத்தில் மட்டுமோ அல்லது பாடசாலை மட்டத்தில் மட்டுமோ அவ்வப்போது சிற்சில நடவடிக்கைகளை மேற்கொள்வதும் பின் கைவிடுவதுமாக இருந்தால் மக்கள் அதிகாரத்திலுள்ளவர்களை ''றாக்கிங்'' செய்ய நேரிடும். அது இங்கு கூறப்பட்ட பட்டியலில் உள்ளதை விட கடுமையானதாகவே இருக்கும்.

ஐயோ கூரையில் ஏற்பட்ட சிறு துவாரத்தால் வீடு நனைகின்றதே என அழுகின்ற பேராசிரியர்களும் பத்திரிகைகாரர்களும் சற்று வெளியே வந்து கண்களை அகலத் திறந்து பார்த்தால் நாடோ, பெரும் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதை காணமுடியும்.



### சாதிவெறியும் பிள்ளைப் பராமரிப்பும்

மலையகத்தில் சில பிரதேசங்களில் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களது குழந்தைகளைப் பராமரிக்கும் நிலையங்களில் தமிழர் இல்லாததால் குழந்தைகள் சிங்கள மொழி பேசும் பராமரிப்பார்களாலேயே கவனிக்கப்படுகின்றனர். இதனால் குழந்தைகள் தமது மொழியைப் பழகும் வாய்ப்புக் குறைவதுடன் தமது தேவைகளைக் கூறவும் கஷ்டப்படுகிறார்கள். இது ஏனென்று விசாரித்த போது இவ்வேலைகட்குத் தகுதியுள்ள தமிழ்ப் பெண்கள் தாழ்த்தப்பட்ட சாதியினராகவே இருப்பதால் சிங்களப் பெண்களையே தாம் விரும்புவதாக இந்த நிலையங்கட்குப் பொறுப்பானவர்கள் கூறினார்கள் என்று தெரியவருகிறது. இந்த விதமான சாதித்தடிப்பு மலையக மக்களைப் பிளவுபடுத்தி அவர்களது நலன்கட்குத் தீங்கு செய்யும் என்பதால் மலையகத்தின் முற்போக்குச் சக்திகள் இது பற்றித் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

### கறுவாக்காட்டுக் குரங்குக் கூத்து

மக்கள் மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாகிக் கவலையால் வாழும்போது கள்ளச் சன்னியாசிமாருக்குக் கொண்டாட்டம். ஜோசியர்களுக்கும் நல்ல பிழைப்பு. கடந்த சில ஆண்டுகளுக்குள் அனுமார் (அப்படிச் சொல்லக்கூடாது பாருங்கோ, பக்தியோடு ஆஞ்சநேயர் என்று சொல்ல வேண்டும்) அந்தஸ்து கொஞ்சம் உயர்ந்து விட்டது. பயம், மூடநம்பிக்கை, எதிர்பார்ப்பு, மனித சபலம் போன்றவற்றைப் பாவித்து, பக்தி வியாபாரம் கொடிகட்டிப் பறக்கிறது. விடுவார்களா, கறுவாக்காட்டுக் கனவான்கள். அவர்களும் தங்களுக்காக ஒரு ஆஞ்சநேயர் கோயில் கட்டப் போகிறார்கள்: இதற்காக தமிழ்நாட்டுச் சன்னியாசி மடமொன்றிலிருந்து கம்பராமாயண நாடகம் என்ற பேரில் ஒரு படுமோசமான தயாரிப்பைக் கொண்டு வந்து 500 முதல் 5000 வரை நுழைவுக் கட்டணம் வசூலித்து அமர்க்களப்படுத்தியிருக்கிறார்கள்.

தமிழ் மக்களில் ஒரு பகுதியினரால் வழிபடப்பட்டுவந்த பல தெய்வங்களைத் துர்த்தெய்வங்கள் சிறுதெய்வங்கள் என்ற ஒதுக்கி வைத்து வந்த சைவ வேளாள மரபுக்காரர்கள் இன்று அனுமார் வழிபாடு என்று அவதிப்படுகிறதைப் பார்க்கப் பாவமாகத்தான் இருக்கிறது.

### பாடசாலைகளில் ''தீண்டாமை'': மலையகத்து வகை

ஹற்றனில் உள்ள உயர்தரப் பாடசாலைகளில் தோட்டத் தொழிலாளர்களது பிள்ளைகள் சேருவதற்கு இயலாத விதமாகச் சிரமம் தரப்படுவதாக முறைப்பட்டு ஒருவர் வீரகேசரிக்குக் கடிதம் எழுதியிருந்தார். தொழிலாளர்களது பிள்ளைகள் படித்து முன்னேறி விட்டால் தங்களது அந்தஸ்து என்னாவது என்று நினைக்கும் முதலாளிகளதும் வசதி படைத்தவர்களதும் மனோபாவத்துக்கும் சில தசாப்தங்கள் முன்பு வரை வடக்கில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்குப் பாடசாலைகளில் இடமளிக்க மறுத்த சாதி வெறியர்களுக்கும் என்ன வித்தியாசம்.

### இவர்கள் சமூக சேவையாளர்கள்

கொழும்பில் ஒரு ஏற்றுமதி இறக்குமதி நிறுவனம் சுத்த தமிழருடையது. அதன் சொந்தக்காரர்கள் கொடை வள்ளல்கள், சமயப் பாதுகாவலர்கள், சமூக சேவையாளர்கள், இலக்கிய காவலர்கள் என்றெல்லாம் புகழப்பட்டு பொன்னாடை போர்த்தப்படுபவர்கள். ஆனால் இந்த நிறுவனம் செய்யும் தில்லுமுல்லுகளால் சாதாரண அப்பாவி மக்கள் தான் பாதிக்கப்படுபவர்கள். உதாரணத்திற்கு இந்நிறுவனமே இந்தியாவில் இருந்து மைசூர் பருப்பை இறக்குமதி செய்து விநியோகிக்கிறது. அந்தப் பருப்பில் கல்லுக் குறுணிகள், சிறு குச்சிகள், வேறும் குறுனல்களைக் கலந்து கிலோவைப் பெருக்கிக் கொள்கிறார்கள். இத்தகைய கலப்படப் பருப்புத்தான் வடக்கு கிழக்கிற்கு நிவாரணமாக அனுப்பப்படுகிறது. அதே போன்றதே அரிசியிலும் திட்டமிட்ட கலப்படம் சீமெந்திலும் ஏதோ ஏதோ எல்லாம் கலந்து கொள்கிறார்களாம். இதுபோன்ற வேறு வேறு வழிகளில் வெள்ளம் போலப் பணத்தை அள்ளி பொதுச் சேவைக்குச் சில துளிகளை அள்ளிப் போட்டு விட்டுப் பெரிய மனிதர் ஆகிக் கொள்கிறார்கள் இந்த தமிழ்ப் பெரும் வர்த்தகப் புள்ளிகள்.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

S - 47, 3வது மாடி
கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி
கொழும்பு - 11
தொலைபேசி :435117, 335844


## சந்திரசேகரத்தின் சுயவிமர்சனமும் எமது பார்வையும்

தற்போது கிடைத்துள்ள அரியவாய்ப்பை நாம் பயன்படுத்தி மலையக மக்களுக்கென தனி மாகாணசபையை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணி தலைவரும் தோட்ட வீடமைப்பு பிரதியமைச்சருமான பெ.சந்திரசேகரம் தினக்குரல் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

மலையக மக்களுக்கு தனிமாகாண அலகு வேண்டும் என்றும் தனிநிர்வாக அலகு வேண்டும் என்றும் அப்பேட்டியில் கூறியிருப்பினும் தனியான பிராந்திய சபையொன்று வேண்டும் என்பதே அவரின் கோரிக்கை ஆகும். தனியொரு சபை அமைவதால் மட்டும் முழு மலையக மக்களின் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான அடிப்படைகளை தோற்றுவிக்க முடியுமா என்பது கேள்விக்குறியாக இருக்கின்ற போதும், மலையக மக்களுக்கு அதிகாரத்தில் பங்கு வேண்டும்; அதிகாரப் பங்கீடு உறுதி செய்யப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தி இருப்பது வரவேற்கப்பட வேண்டியதாகும். மலையக மக்களுக்கு உறுதியான உள்ளமைப்பு ஒன்று உருவாக்கப்படல் வேண்டும் என்பதைப் புதிய - ஜனநாயகக் கட்சி 1984 ல் இருந்து வற்புறுத்தி வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தனிமாகாண கோரிக்கையை முன்வைப்பதற்காக அவர் கூறும் நியாயங்கள் அடிப்படையானவை என்று கொள்ள முடியாவிடினும், மலையக மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் அவர்களுக்கான சுயாட்சி உறுதி செய்யப்பட வேண்டும் என்பதே மிகவும் அடிப்படையான தர்க்கமாகும்.

அத்துடன் தனிமாகாண கோரிக்கையை வென்றெடுப்பதற்கான வேலைத்திட்டம், கொள்கை நடைமுறை, உபாயம், தந்திரோபாயம் என்பன பற்றி அவரோ அவரது மலையக மக்கள் முன்னணியோ எதுவித கருத்தையும் முன்வைக்கவில்லை. மலையக மக்களுக்கான தனிமாகாணத்தை அரசாங்கத்திடம் கோரியுள்ளது என்பதனையே உயர்ந்த செயல்முறையாக கொண்டு அவர் திருப்தியடைந்து விட்டார்.

அவரின் கோரிக்கைக்கு அரசாங்கம் செவிசாய்க்காதபடியால் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லை என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார். இச்சந்தர்ப்பத்தில் தனிமாகாணம் வழங்கப்படாவிட்டால் இனியொரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படமாட்டாது என்றும் அவர் அறுதியிட்டு கூறுகிறார். மலையக மக்களுக்கு சரியான அரசியல் தலைமை இல்லை என்றும் மலையக தொழிற்சங்கங்களுக்கு அரசியல் பார்வை எதுவுமே கிடையாது என்றும் குறிப்பிட்டுள்ளார். இது அவரின் பலவீனத்தின் வெளிப்பாடா அல்லது அவரின் சுயவிமர்சனமா, என்பது புரியவில்லை.

அக்கருத்து அவரின் சுயவிமர்சனமாக இருந்தால் பாரம்பரிய தொழிற்சங்க வழிமுறைகளையும், தரிசனத்துக்குரிய தலைமைத்துவத்தையும் ஆதர்சமாக கொண்டு செயற்பட்டதை தவறு என்று கூறுகிறார் என்று பொருள்படும்.

அரசாங்கத்துடன் பேரம்பேசி மலையக மக்களின் உரிமைகளைப் பெற முடியாது என்பதையும் அவர் உணர்ந்துவிட்டார். மலையக மக்கள் இன்று அனுபவிக்கும் சிற்சில உரிமைகளும், சலுகைகளும் போராட்டங்களினால் பெறப்பட்டவை அல்லது கொடுக்கப்பட்டவை என்பதை உணர்ந்து தற்கால எதிர்கால வழிமுறைகளை சரியாக தீர்மானித்திருந்தால் பலவீனப்படுவதற்கு வாய்ப்பே இல்லை.

ஒரு உரிமை அல்லது சலுகை பெறப்படுவதால் ஏற்படும் முன்னேற்றமும் வரையறுக்கப்பட்டது போல் கோரிக்கையின் அல்லது போராட்டத்தின் தோல்வியால் ஏற்படும் பின்னடைவும் வரையறுக்கப்பட்டதே ஆகும். அவரது வர்க்க நிலைமை, அவரின் அரசியல், கொள்கை கோட்பாடு, நடைமுறைகள் உபாயங்கள், தந்திரோபாயங்கள் இந்த உண்மையை ஏற்க தடையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எனினும் தனிமாகாண கோரிக்கை அல்லது அதிகாரப் பங்கீட்டை கேட்டால் மட்டும் போதாது. அதனை பெறுவதற்கான அரசியல் வழிமுறைகள் பற்றி தெளிவான முடிவை அவரும், அவரது முன்னணியும் எடுக்க வேண்டும். பின்னர் அக்கருத்துடன் ஒத்துப் போகக்கூடிய ஏனைய அமைப்புகளுடன் பொது இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த பொது இணக்கப்பாட்டுடன் கூட்டாக மலையக மக்களிடமும் இந்நாட்டின் ஏனைய மக்களிடமும் போக வேண்டும். இவ்வாறான அரசியல் வழிமுறைகளில் நம்பிக்கை வைக்க வேண்டும்.

அவர் கூறுவது போன்று தற்போது கிடைத்துள்ள அரிய வாய்ப்பை பயன்படுத்தியும் மலையக மக்களுக்கென அதிகாரப் பங்கீட்டை பெறமுடியாது போகலாம். அதனுடன் மலையக மக்களின் வரலாறோ, அவர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமோ மூர்ச்சித்து விடாது. அது தொடரும்! வளரும்!

அந்த தொடர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் ஏற்றவகையில் அரசியல் வழிமுறைக்ளை வகுத்துக் கொள்ள வேண்டும்.

மறுபுறம் ஏனைய தொழிற்சங்கங்களும், சில படித்தவர்களும் கூறுவது போல் மலையக மக்கள் தற்போது அதிகாரப் பங்கீடு கேட்கக்கூடாது என்றும் அக்கோரிக்கையால் மலையகத்தில் யுத்த சூழ்நிலை ஏற்படுமென்றோ, இனமுரண்பாடுகள் கூர்மையடையும் என்றும், அதீதமாக பயம் கொள்ளத் தேவையில்லை. மலையக மக்களுக்கு அவர்களின் விவகாரங்களை அவர்களே தீர்மானிக்க உரிமைகளும், பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டும். வழங்கப்படாமல் விட்டாலேயே பயம் கொள்ளக்கூடிய சூழ்நிலைகள் தோன்ற வாய்ப்புண்டு என்பதை எல்லோருக்கும் உணர்த்த வேண்டும்.

-ஆசிரியர் குழு-



## பகிடி வதையின் முடிவுப் பாதை!

மாணவன் வரப்பிரகாஷின் கொடுமையான மரணம்! அனைவரின் உள்ளங்களையும் உருக்குலைய வைத்த சம்பவம். படிப்பில் பல படிகள் தாண்டி பல்கலைக்கழகம் சென்ற மாணவனுக்கு பகிடிவதை என்ற பெயரில் மரணப்படுகுழி காத்திருந்தது! உயர்கல்வியின் உச்சநிலைக்கு வந்த மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட உச்சக்கட்டமான காட்டுமிரண்டித்தனம்! தன்னினத்தினுள்ளேயே அதுவும் ஆண்டாண்டு காலமாக அறிவு வளர்த்த மாணவர்களால் செய்யப்பட்ட மிருகத்தனத்தையே இது கோடிட்டுக் காட்டுகின்றது. இது தனியே மனவேதனைக்குரிய விடயம் மட்டுமல்ல. தமிழ் மக்கள் அனைவரையும் தலைகுனிய வைக்கும் பாமரத்தனமும் கூட; பல்கலைக்கழக அனுமதி பெற்ற தம் பிள்ளைகளை மகிழ்ச்சியுடனும், எதிர்கால இனிமையான கற்பனைகளுடனும் அனுப்பிவைக்கும் பெற்றோர்கள் சிங்கக்குகையின் வாயிலுக்குச் செல்வது போல் தான் தம் பிள்ளைகளும் பல்கலைக் கழக வளாகத்தினுள் காலடி எடுத்து வைக்கின்றார்கள் என்பதை அறிய வேண்டும். இவ்விடயம் முக்கியமாகத் தமிழ் மாணவர்களுக்கே உரித்தாவது தான் வேதனைக்குரியது! பல்கலைக்கழகங்களில் மட்டுமல்ல; கல்விக் கல்லூரிகள் போன்ற இலங்கையிலுள்ள அனைத்துக் கல்விக் கழகங்களிலும் 'ராகிங்' என்ற புயல் வீசிக் கொண்டேயிருக்கிறது. தம், தம் இனங்களுக்குள்ளேயே செய்யப்படும் இந்தப் பகிடிவதையின் நோக்கம் மரணவாசல் என்பதைத் தமிழ் மாணவன் வரப்பிரகாஷின் சோகமுடிவு எடுத்துக்காட்டுகிறது. "Ragging' என்ற பதத்தின் உட்பொருள் என்ன? விரும்பாததைக் கட்டாயப்படுத்திச் செய்ய வைப்பதுதான் இதன் அடிப்படைக் கருத்து. பொதுவாகப் பதினைந்து, பதினாறு, வயதெல்லையைத் தாண்டிய மாணவர்கள் தம் சொந்த விருப்பு, வெறுப்புகளுக்கேற்பத் தம் காலிலேயே நிற்க முனைவது வழமை. அவ்வாறுள்ளபோது, அவர்களைக் கட்டாயப்படுத்தி, அவர்கள் மனம் ஒவ்வாத செயல்களைச் செய்யவைக்கும் ஓர் கெட்ட நோக்கையே 'பகிடிவதை' உணர்த்துகிறது. எனினும் இது ஆரம்பத்தில் மாணவர்களிடையே நிகழும் பல்வேறு கருத்து வேறுபாடுகளைப் போக்கி, அனைவரையும் சகஜமாக சகோதரத்தன்மையுடன் பழகும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது உண்மையே. இன்றும் சிங்கள மாணவர்களிடையே ஓரளவு எல்லைமீறாத, கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளப்படும் போது, தமிழ் மாணவர்களிடையே மட்டும் 'பகிடிவதை' என்ற பெயரில் பல கொடுமையான அருவருக்கத்தக்க சம்பவங்கள் நிகழ்வது ஏன்?

இலங்கை முழுதும் வியாபித்த பகிடிவதை அரக்கனின் கைப்பிடிக்குள் சிக்கி உருக்குலைந்த உள்ளங்கள் எத்தனை? அண்மையில் றுகுணு பல்கலைக் கழகத்தில் பகிடிவதை தாங்காது தற்கொலைக்கு முயற்சித்த மாணவியின் பரிதாப நிலைமை இது தவிர, வவுனியா கல்விக் கல்லூரியில் 146 மாணவர்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதும், மட்டக்களப்பில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தில் அத்துமீறிச் சென்ற பகிடிவதைகள் இறுதியாக இராணுவம் தலையிட வேண்டி ஏற்பட்டதும் நாம் அறிந்ததே. யாழ்.பல்கலைக் கழகத்தில் கூட பகிடிவதை என்ற முறையில் நடாத்தப்படும் கொடுமைகள் மூடி மறைக்கப்படுகின்றன. சிரேஷ்ட மாணவர்களின் சொல்லுக்குப் பயந்து; பகிடிவதையை அனுபவிக்கும் மாணவர்கள் அதுபற்றி வெளியில் கூறவோ அன்றி முறையிடவோ தயங்குகிறார்கள். தம் பெற்றோருக்குக் கூடத் தாம் அனுபவிக்கும் துன்பங்களை அவர்கள் மறைப்பது துரதிஷ்டமே. ஆயினும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை தமக்கான பகிடிவதையை மாணவர்கள் தாமே தீர்மானிக்கின்றார்கள். இங்கு "Ragging group'(பகிடி வதை செய்யும் குழு), "Anti-Ragging group' (பகிடிவதையை எதிர்க்கும் குழு) என மாணவர்கள் தாமே பாகுபட்டுக் கொண்டு பகிடிவதையை விரும்பும் மாணவர்களே அதனைப் பெறுகிறார்கள். பகிடிவதை பெற்றால் தான் சிரேஷ்ட மாணவர்களிடமிருந்து கல்விக்கான உதவி கிடைக்கும் என்பது மூட நம்பிக்கையே. பகிடிவதையை எதிர்க்கும் சிரேஷ்ட மாணவர்களும், சிங்கள மாணவர்களும் கனிஷ்ட மாணவர்களுக்கு உதவி செய்து குறிப்பிடத்தக்கது. பகிடி வதையை ஏற்கும் மாணவர்கள் மறுமுறை தாமும் புதிய மாணவர்களுக்கு பகிடிவதை கொடுக்கும் நோக்குடனேயே அதனை ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதே அடிப்படை உண்மை. ஆயினும், பேரதெனியா பல்கலைக்கழகத்தில் அனைவரும் பகிடிவதைக்கு ஆளாக வேண்டிய கட்டாய நிலையில் உள்ளனர். மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பகிடி வதையை எதிர்க்கும் பிரிவினரும் உள்ளதால் பகிடிவதை மிக மோசமான நிலையை அடையாதிருப்பது சற்று மனநிம்மதிக்குரிய விடயம். ஆயினும், இரு பிரிவினருக்கும் இடையே இதனால் பல பூசல்கள் ஏற்பட்டு, கீரியும், பாம்பும் போன்ற நிலைமையில் மாணவர்கள் நடந்து கொள்வது தான் கவலைக்குரிய விடயம். பல்கலைக்கழகங்களில் தலைமைப்பீடங்களில் பணிபுரிவோர் அதிகமாக சிங்கள மக்களே. அவர்களிடம் பகிடி வதை பற்றிய முறைப்பாடுகளைக் கூறும் போது அலட்சியப்படுத்துகிறார்களென்ற தமிழ் மாணவர்களின் குற்றச்சாட்டு நிராகரிக்கப்பட வேண்டியது. நிச்சயமாக அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்கள். ஆனால், பகிடிவதையை விரும்பும் மாணவர்கள் கூறும் போலித்தனமான அறிக்கையே இது.

தமிழ் மாணவர்கள் செய்யும் இந்த அட்டூழியங்களால் பெரும்பான்மை இனத்தவர்களின் நகைப்புக்கு தமிழ்ச்சமூகம் உள்ளாவது குறிப்பிடத்தக்கது. இன்றைய உலகிலே நிம்மதித் தராசுத் தட்டில் தமிழர்களின், முக்கியமாக யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் தட்டு மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளது. யாழ் மக்கள் படும் துன்பங்கள் சொல்லிலடங்காது. இந்தச் சூழ்நிலைகளிலேயே சாதனையாளர்களாக மிகவும் முயற்சி செய்து பல்கலைக்கழக வாயிலையடையும் மாணவர்கள் அதே யாழ் மாணவர்களால் துன்புறுத்தப்படுவது ஏன்? கவலையையும், கஷ்டங்களையும் அனுபவித்து வரும் மாணவர்களின் மனம் மற்றவரைக் கொடுமை செய்து இரசிக்கும் கல் நெஞ்சமாக மாறுவது ஏன்? பண்பாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய படித்த தமிழ்ச்சமுதாயம் பண்பாட்டின் அடிமட்டத்துக்கே சென்றது ஏன்? அந்த நிலையின் இறுதி நிலையே இன்றைய வரப்பிரகாஷின் கொடிய மரணம்! மரணம் நிகழுமளவிற்கு மேற்கொள்ளப்பட்ட பகிடிவதை! பல தடவை தோப்புக்கரணம் போடுதல் தொடக்கம், மின்னேற்றுதல், காயமேற்படுதல் வரை இன்றைய பகிடிவதை முன்னேற்றம் கண்டுள்ளது. இது தவிர "Room ragging' என அழைக்கப்படும் பல அருவருக்கத்தக்க சம்பவங்களும் இடம்பெறுவது தமிழ் பண்பாட்டிற்கான தலைகுனிவு! வரப்பிரகாஷின் இந்த மரணம் பகிடி வதையின் சுயரூபத்தை வெளிக்காட்டியுள்ளது. இதன் பின்னாவது "Ragging' என்ற அரக்கன் அழிந்து போவானா? பகிடிவதை என்ற குட்டிச் சுவரினுள் தம்மை அடைத்துக் கொள்ளும் மாணவர்கள் திருந்துவார்களா? இனியும் இவ்வாறான கல்விப் பாதையில் கறைபடிந்த நிகழ்வுகள் இடம்பெறுமா? காலம் பதில் கூற வேண்டிய கேள்வியல்ல இது. கல்வியில் உயர் நிலையையடைந்த தமிழ் மாணவர்கள் காலத்தைப் பார்த்துக் கூற வேண்டிய பதில் இது!

பல்கலைக் கழகங்களில் கல்விபயிலும் தமிழ் மாணவர்களுடனான கலந்துரையாடல்களில் இருந்து நமது மாணவ நிருபர் தொகுத்தது.

நன்றி - நூலகத்திட்டம்



# தீர்வுத்திட்டமும் வடபுலத்து உணர்வலைகளும்

வடக்கு கிழக்கு மக்கள் அனுபவித்து வரும் கொடுமைகள் துன்ப துயரங்கள் எண்ணிடலங்காதவை. விபரிக்க இயலாத விரிவு கொண்டவை. ஒவ்வோர் குடும்பத்திற்கும் ஒவ்வொரு சோகக் கதை உண்டு. ஏதோ ஒரு வகை இழப்பைச் சந்திக்காத எந்தவொரு குடும்பத்தையும் காணமுடியாது. இன உரிமைக் கோரிக்கையின் பேரில் எழுந்த போராட்டங்களும் அவற்றைக் காலத்திற்குக் காலம் அடக்கி ஒடுக்க அரசாங்கங்கள் எடுத்து வந்த அரச பயங்கரவாத நடைமுறைகளும் தமிழ் மக்களை இன்றைய அவல நிலைக்கு கொண்டு வந்து நிறுத்தியுள்ளன. இன்று வடக்கு கிழக்கு நிரந்தர யுத்த பூமியாகி நிற்கிறது. இந்நிலைமைக்கு இலங்கையின் ஆளும் அதிகார பேரினவாத சக்திகள் தான் காரணகர்த்தாக்கள் என்பதில் மறுபேச்சுக்கே இடமில்லை. அதேவேளை தமிழர் இன உரிமை கோரி நின்ற மிதவாதத் தலைமைகளின் தவறான தலைமைத்துவ வழிகாட்டல்களும், அதன் பின்னான ஆயுதம் தாங்கிய தீவிரவாத இளைஞர் இயக்கங்கள் புரிந்த நடைமுறைத் தவறுகளும் தமிழ் முஸ்லீம் மக்களின் பல்வகை இழப்புக்களுக்கு கணிசமான பங்கை வழங்கி உள்ளன. அவற்றின் தொடர்ச்சியாகவே தமிழர்களின் இரட்சகர்கள் என நம்ப வைக்கப்பட்ட இந்தியாவின் தலையீட்டாலும் படையெடுப்பாலும் தமிழ் மக்கள் பன்முகப் பாதிப்புகளைச் சந்திக்க நேர்ந்தது. இவை காலம் கடந்து மறக்கப்பட்டுப் போனவைகள் அல்ல. தமிழர்களின் வரலாற்றில் துயரும் கறையும் படிந்த பக்கங்களாகப் பதிவு பெற்றுக் கொண்டன. இவற்றின் பட்டறிவானது மீண்டும் மீண்டும் மீள்நினைவுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

இத்தகைய இன விடுதலைப் போராட்டம் யுத்தமாகியுள்ள உச்ச நிலையிலேயே அரசியல் தீர்வுத் திட்டம் அறிக்கை வடிவிலே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நீண்ட விவாதங்கள், எதிர்ப்புகள், கண்டனங்கள், இழுபறிகளுக்கு மத்தியிலேயே அது முன்வைக்கப்பட்டுள்ளது. இது பற்றி சாதகமாகவும் பாதகமாகவும் அபிப்பிராயங்கள் முன்வைக்கப்படுகின்றன. அரசாங்க சார்பு கட்சிகளும் சில அரச சார்பற்ற நிறுவனங்களும் தொழிற் சங்கங்களும் அண்மையில் சந்தி - தெரு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டன. அவற்றில் கணிசமான மக்கள் கலந்து கொள்ளவும் செய்தனர். பேரினவாத அலையைக் கிளப்பி மேலோங்கச் செய்வதற்காக சிங்கள ஆணைக்குழுவினதும் ஏனைய இன மத வெறி சக்திகளினதும் முயற்சியை அமுக்குவதில் மேற்படி அரசாங்க சார்பு ஆர்பாட்டங்கள் மேவி நின்றமை சாதகமானதும் வரவேற்கப்பட வேண்டியதுமாகும். ஆனால் அத்தகைய ஆர்ப்பாட்டங்களில் முன்வைக்கப்பட்ட பிரதான முழக்கங்கள் சிந்திக்க வைத்துள்ளன. 'அரசியல் தீர்வுத்திட்டத்தை அமுல் படுத்து' ஐக்கிய தேசிய கட்சியே தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்கு' என்பனவற்றின் அர்த்தங்கள் ஆராய்வுக்கும் அவதானத்திற்கும் உரியவையாகும்.

தற்போதைய தீர்வுத்திட்டத்தை அப்படியே நிறைவேற்றுவதோ அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவைக் கோருவதோ இன்றைய முழு முதல் கடமை எனக் கொள்ள இயலாது. ஏனெனில் அதனை விட மிக மிக முக்கியமான விடயம் தீர்வுத்திட்டம் முழுமையானது என்ற நிலையில் பிரச்சினைக்குரிய மக்களான தமிழ் முஸ்லீம் மலையக மக்களின் அங்கீகாரமும் ஆதரவும் பெறப்பட வேண்டியதாகும். அவ்வாறு நேர்மையான வழியில் அம்மக்களின் அபிப்பிராயமும் ஆதரவும் பெறமுற்படும் போதே போராட்டத்தின் முன்னணிப் பிரதிநிதியாக விளங்கும் விடுதலைப் புலிகளின் பங்களிப்பையும் புரிந்து கொள்ள முடியும். மேலிருந்து முடிவுகளைச் செய்து கீழே திணிப்பாக்கும் போதே பிரச்சினைகள் மேன்மேலும் பூதாகரமாகி விடுகின்றன என்பது விளங்கிக் கொள்ளப்படல் வேண்டும். ஆதலால் தீர்வுத் திட்டம் உரியவாறு வடக்கு கிழக்கு மக்கள் மத்தியில் முன்வைக்கப்பட்டு உரியவாறு அபிப்பிராயமும் ஆதரவும் பெறப்படுவது அவசியமாகும்.

அந்த வகையில் வடபுலத்து மக்களின் கருத்து நிலைப்பாடு தீர்வுத்திட்டத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கக் கூடியதாகும். அதற்கு விசேட காரணங்களும் வரலாற்றில் இருந்து வந்துள்ளது. வடபுலத்து மக்கள் எப்போதும் தமது உயர்ந்த அரசியல் விழிப்புணர்வையும் அவை சார்ந்த போராட்டங்கள் எழுச்சிகளையும் முன்னெடுத்து வந்துள்ளார்கள். பல சந்தர்ப்பங்களில் முழு நாட்டிற்குமே முன் மாதிரியான அரசியல் எழுச்சிப் பாத்திரத்தைக் கொண்டவர்களாக இருந்துள்ளனர். 1931ல் பிரித்தானியர்கள் கொண்டு வந்த டொனமூர் அரசியல் திட்டம் நாட்டின் சுதந்திரத்திற்கு வழிவகுக்கவில்லை எனக் கூறி அதன் கீழ் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலை முற்றாகப் பகிஸ்கரித்துக் கொண்டனர். அதனால் நான்கு ஆண்டுகள் சட்டசபையில் பிரதிநிதித்துவம் இன்றித் தமது உறுதியான எதிர்ப்பைத் தெரிவித்து வரலாற்றுப் பெருமையைத் தேடிக் கொண்டவர்கள். 1948ல் இந்திய வம்சாவழித் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டபோது தமது தலைவர்கள் சிலர் செய்த துரோகங்களை எதிர்த்து இறுதியில் அவர்களை அரசியலில் இருந்து தூக்கி வீசிக் கொண்டவர்கள் வடபுலத்து மக்கள். 1953ன் புகழ் மிக்க இடதுசாரிகளது ஹர்த்தால் போராட்டத்தில் தென்னிலங்கைத் தொழிலாளி வர்க்கத்தோடு தோளோடு தோள் நின்று போராடி அதனை வெற்றி பெறச் செய்தவர்கள். 1961 ல் இன உரிமை கோரிய சத்தியாக்கிரகப் போராட்டத்தை பரந்த மக்கள் எழுச்சியாக்குவதில் தமது முழுப் பங்களிப்பையும் வழங்கியவர்கள். 1966 - 70 கால கட்டத்தில் தமிழர்களிடையே நீண்டகாலம் நிலவி வந்த சாதியத் தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிரான புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களை நடாத்தி அந்த எழுச்சிகளின் மூலம் மறுக்கப்பட்டு வந்த உரிமைகளை வென்றெடுத்து நிலை நாட்டியவர்கள். 1972 ல் நடைமுறைக்கு வந்த அரசியல் அமைப்பினால் தமிழர்கள் இரண்டாம் தரமாக்கப்பட்டமையை எதிர்த்து உரிமைக்குரல் எழுப்பி முன்சென்றவர்கள். 1977க்குப்பின் ஜே.ஆர்.ஏவிய பேரினவாத ராணுவ ஒடுக்குமுறைக்கு முகம் கொடுத்து எழுச்சி பெற்ற இளைஞர்களின் ஆயுதப் போராட்டப் பாதைக்கு நம்பிக்கையோடு கை கொடுத்து ஆதரவு வழங்கி அநீதி அட்டூழியங்களுக்கு அடிபணிய மறுத்தவர்கள். பிராந்திய மேலாதிக்க உள்நோக்கத்துடன் அமைதி காக்கும் பெயருடன் வந்த இந்தியப் படைகளின் கொடுமைகளுக்கு எதிராகப் பன்முக எதிர்ப்புக்களைக் காட்டிப் போராடியவர்கள். இன்றும் இலங்கை ராணுவத்தின் ஒவ்வொரு அடாவடித்தனத்திற்கும் ஆக்கிரமிப்பு மனோபாவத்திற்கும் எதிராகத் தமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்து வருபவர்கள்.

இவ்வாறு தமது ஜனநாயக பூர்வமான கருத்துக்களையும் அரசியல் எழுச்சிகளையும் கொண்டிருந்த வடபுலத்து மக்கள் கடந்த பதினைந்து ஆண்டுகளில் படிப்படியாகத் தமது ஜனநாயக மனித உரிமைகளை இழந்து வந்துள்ளனர். பேரினவாத ஒடுக்குமுறை காரணமாகவும் ஆயுதம் தரித்த இயக்கங்களின் ஜனநாயக விரோத நிலைப்பாடுகளாலும் மக்கள் தமது கருத்துக்களையும் செயற்பாடுகளையும் முன்வைக்க முடியாதவர்களாகினர். ராணுவம் வடக்கை மீட்டுள்ளதாகக் கூறப்படும் இன்றைய நிலையிலும் அங்கு பகிரங்க ஜனநாயக அரசியல் செயற்பாடுகள் இல்லாத நிலையே தொடர்கிறது.

இந்நிலையிலே அரசாங்கம் முன்வைத்த தீர்வுத்திட்டம் பற்றிய ஓர் வெகுஜனத் தன்மை வாய்ந்த ஜனநாயக கருத்துப் பரிமாற்றங்கள் எதையும் அங்கு காணமுடியவில்லை. அதேவேளை மக்கள் தம்மளவிலே தீர்வுத்திட்டம் பற்றி விவாதிக்கவும் கருத்துக்களைப் பரிமாறவும் செய்வதை அவதானிக்க முடிகிறது. அரசாங்கம் ஒரு சில கருத்தரங்குகளை மிகுந்த பாதுகாப்பின் மத்தியில் நடாத்தியிருக்கின்றது. அதிகளவு அரசாங்க ஊழியர்கள் கலந்து கொண்ட இக்கருத்தரங்குகளில் தீர்வுத்திட்டத்தில் முன்வைக்கப்பட்ட தெளிவற்ற அம்சங்கள் பற்றி தாக்கமான பல கேள்விகள் எழுப்பப்பட்டன. விளக்கங்கள் அளிக்கப்பட்ட போதிலும் அவை கலந்து கொண்டோரைத் திருப்திப்படுத்தவில்லை.

மேலும் வடக்கிற்கு தற்போது மட்டுப்படுத்தப்பட்டளவில் கொழும்பு தமிழ்ப் பத்திரிகைகள் அனுப்பப்படுகின்றன. அதேவேளை அங்கு ஒரே ஒரு தினசரிப் பத்திரிகை மிகுந்த முன்னெச்சரிக்கை சுயகட்டுப்பாட்டுடன் வெளிவந்து கொண்டிருக்கிறது. இருப்பினும் ஓரளவிற்கு மக்கள் மத்தியில் கருத்துப் பரம்பல் நிகழச் செய்கின்றன. அவற்றை அவதானிக்கும் போது தாக்கமான பல கேள்விகள் பலதரப்பிலுமிருந்து முன்வைக்கப்படுகின்றன.

முதலிலே முன் வைக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டம் முழுமையானதாகவும் தமிழ் மக்களின் நீண்டகால அபிலாஷைகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். 1995ல் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்திலிருந்த பல விடயங்கள் வெட்டிக் குறைக்கப்பட்டுள்ளமையைப் பலர் சுட்டிக் காட்டுகிறார்கள். இலங்கை ஒன்றியமாக அமையும் எனக் குறிப்பிடப் பட்டுள்ளமையை ஒரு முன்னேற்றகரமான முடிபு என வரவேற்கிறார்கள். ஆனால் அதன் வழியில் அதிகாரங்கள் பிராந்தியங்களுக்கு மிக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதினால் வடக்கு கிழக்கு மக்களது விருப்பங்கள் மறுக்கப்படுகிறது என்னும் உணர்வு காணப்படுகிறது. நிதி, காணி, பாதுகாப்பு, வெளிநாட்டு உதவி போன்றவற்றில் மத்திய அரசின் வலுவான பிடியும் கட்டுப்பாடும் இருப்பதை பாதக அம்சங்களாகவே காணுகின்றனர். இவை யாவற்றுக்கும் மேலால் வடக்கு கிழக்கு துண்டாடப்படுவதும் கிழக்கு மேலும் பல துண்டுகளாகி அதன் பிரதேசங்கள் வெட்டிக் கொள்ளப்படுவதும் என்பதை வடபுலத்து மக்கள் எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள மறுக்கும் உணர்வுகளே மேலோங்கி காணப்படுகின்றது. வடக்கு கிழக்கு இணைந்ததும் அதிகாரங்கள் வலுவானதுமான தீர்வு இல்லாதுவிடின் தீர்வுத் திட்டம் வெற்றுத்தனமான ஒன்றாகவே அமைந்து விடும் என்பதே பரவலான அபிப்பிராயமாக இருக்கிறது.

மேலும் இத்தீர்வுத்திட்டம் முழுமை பெற்ற ஒன்றாகி தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யத் தவறுமாயின் கடந்த நான்கு தசாப்தங்களில் தவறிப்போன சந்தர்ப்பங்களை நினைவு கொள்கிறார்கள். 1957 ல் பண்டா - செல்வா ஒப்பந்தமும் 1966 ல் டட்லி - செல்வா ஒப்பந்தமும் நடைமுறைக்கு வராமலேயே சாகடிக்கப்பட்டது. அதன் பின் 1981 ல் வெற்று டப்பா போன்ற மாவட்ட சபையும் 1987 ல் வந்த மாகாண சபையும் அர்த்தமற்றவை ஆகிக் கொண்டன. மாகாண சபையை விட பல்வேறு விடயங்களில் முன்னேற்றகரமானது எனக் கூறப்படும் இன்றைய தீர்வுத்திட்டத்தின் மீது முழுமையான ஒரு நம்பிக்கையை வடபுலத்து மக்கள் கொள்வதற்கு முடியாத அளவுக்கு அதன் போதாமை இயலாமை மனத்தடைகளாக இருப்பதை நோக்க முடிகிறது.

அதேவேளை இத்தீர்வுத்திட்டத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் எவ்வகையிலும் அக்கறைக்கு எடுக்கவில்லை. அவர்களுக்கு அரசாங்கம் அதனை அனுப்பி வைக்கவும் இல்லை. இது ஒரு ஏமாற்றுத் திட்டம் என்பதாகவே அவர்களது பக்கத்திலிருந்து கூறப்படுவதைக் கேட்க முடிகிறது. அதேவேளை ஜனநாயக நீரோட்டத்திற்கு திரும்பிய தமிழர் இயக்கங்கள் அனைத்தும் ஒரே குரலில் பேச முடியாத நிலையில் காணப்படுகின்றன. ரெலோ இயக்கம் தீர்வுத்திட்டத்தை முற்று முழுதாக நிராகரித்து நிற்கிறது. அதேவேளை அரசாங்கத்துடனான இராணுவ உறவைத் துண்டிக்கவில்லை. பாராளுமன்றத்தினுள் உள்ள ஈ.பி.டி.பி, புளொட் ஆகியன இக்கட்டான நிலையில் இருந்து வருகின்றன. முற்று முழுதாக எதிர்க்கவும் முடியாது. அதேவேளை முழுமையாக ஆதரிக்கவும் முடியாத நிலையில் தற்போது சங்கடத்துடன் இருந்து வருகிறார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணி மிகவும் தள்ளாடித் தள்ளாடி நிற்கிறது. அதன் உயர் மட்டத்தினருக்கு தீர்வுத்திட்டத்தில் ஒரு பிடிப்பு நம்பிக்கை காணப்படுகிறது. ஏதோ கிடைத்தால் போதும் என்ற நிலை. அதற்கும் உட் கட்சியில் பலவித அபிப்பிராய வித்தியாசங்கள். அமைச்சர் பீரிஸ் வெளியிட்ட வடக்கு கிழக்கு இணைப்பை உடைக்கும் யோசனை கூட்டணி உட்பட தமிழர் தரப்பினர் அனைவருக்குமே பேரிடியாக உள்ளது. மற்றவற்றில் ஒருவாறு சமாளித்துச் சென்றாலும் இணைப்பு உடைப்பில் இணங்கிப் போவது எப்படிச் சாத்தியம் என்ற கேள்வி எழும்பி நிற்கிறது. இவற்றை விட ஒவ்வொரு இயக்கமும் கூட்டணியும் தத்தமது எதிர்கால இருப்புக்கு வழி தேடுவதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

இத்தமிழ் அமைப்புகளின் நோக்கையும் போக்கையும் வடபுலத்து மக்கள் மிக உன்னிப்பாக அவதானித்து வருகிறார்கள். அவர்களின் கடந்த காலம் நிகழ்காலம் எதிர்காலத்தைத் தகுந்தபடி கணிப்புக்கு உள்ளாக்கி வரும் சரியான கணணிப் பொறியாகவே வடபுல மக்கள் பார்த்து பதிந்து கொண்டிருக்கிறார்கள்.

வடபுலத்து மக்களுக்கு சமாதானம் இயல்பு வாழ்க்கை மிக மிக அவசியம் தேவைப்படுகிறது. அதற்காக யுத்தம் முடிவுக்கு வருவதும் அரசியல் தீர்வு காணப்படுவதும் அவர்களால் மனப்பூர்வமாக வேண்டப்படுகிறது. ஆனால் அதற்காக அரைகுறைத்தனமான தீர்வை, வடக்கு கிழக்கைத் துண்டாடும் தீர்வை, அதிகாரங்கள் அற்ற வெற்று டப்பாத் தீர்வை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளும் நிலையில் அவர்கள் இல்லை என்பதைத் தெளிவாகக் காண முடிகிறது. இத்தனை இழப்புக்கள் சோகங்கள் தியாகங்கள் துன்ப துயரங்களுக்குப் பின்பும் முழுமையற்ற ஒன்றுதான் தீர்வு என்றால் அதனால் எமக்கு என்ன பயன்? என்ற கேள்வியுடனேயே தீர்வுத் திட்டத்தை வடபுலத்து மக்கள் நோக்குகின்றனர்.

வடபுலத்து மக்களுக்கு சமாதானம் இயல்பு வாழ்க்கை மிக மிக அவசியம் தேவைப்படுகிறது. அதற்காக யுத்தம் முடிவுக்கு வருவதும் அரசியல் தீர்வு காணப்படுவதும் அவர்களால் மனப் பூர்வமாக வேண்டப்படுகிறது. ஆனால் அதற்காக அரைகுறைத் தனமான தீர்வை, வடக்கு கிழக்கைத் துண்டாடும் தீர்வை, அதிகாரங்கள் அற்ற வெற்று டப்பாத் தீர்வை எவ் வகையிலும் ஏற்றுக் கொள்ளும் நிலையில் அவர்கள் இல்லை என்பதைத் தெளிவாகக் காண முடிகிறது.

அ.பூபதி

நன்றி - நூலகத்திட்டம்



# மலையக மக்களுக்கு உள்ளமைப்பு அவசியம் இதனைப் பெற மறுப்பது துரோகம்!

மலையக மக்களுக்கென தனியான பிராந்தியசபையை கேட்பது காலத்துக்கு ஒவ்வாத செயல் என்று இ.தொ.கா.வின் எம்.பியும், முன்னாள் பிரதியமைச்சருமான பி.பி.தேவராஜ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் மலையக மக்களின் இனத்துவ வளர்ச்சி பற்றி பெரிதாக பேசுவதில் மிகவும் வல்லவர் அவரே.



புதிய அரசியலமைப்பின் படைப்பாளியான அமைச்சர் ஜீ.எல். பீரிஸை அவர் அடிக்கடி சந்தித்து மலையக மக்களின் இனத்துவ உரிமைகளை உறுதி செய்ய பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாக வாரந்தோறும் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன. அரசாங்கத்தின் உத்தேச அரசியலமைப்பு வெளியிடப்பட்ட பிறகு பார்த்தால்தான் அவர் செய்த காரியம் எதுவுமே இல்லை என்பது தெரிகிறது.

லண்டனில் படித்துக் கொண்டிருக்கும் போது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்துவம் பெற்றவர்; முற்போக்கு இலக்கியவாதிகளுடன் நெருங்கிய உறவு கொண்டவர் என்றெல்லாம் பேசி அவரை ஒரு இடதுசாரி என்று காட்டுவதில் சிலருக்கு அலாதிப் பிரியம்.

ஆனால் மலையக மக்களின் சுயநிர்ணய உரிமையை அவர் ஏற்றுக்கொள்வதாகவும் இல்லை. அவர்கள் சுயாட்சியை பெற உரித்துடையவர்கள் என்பதையும் ஏற்பதாகவும் இல்லை. அதுமட்டுமல்ல இந்திய வம்சாவளி மக்களின் ஒரு குறிப்பிட்ட சாதி சங்கத்தில் இவர் முக்கியமானவர் என்றும் கதைக்கப்படுகிறது. இவ்வாறு சாதிக்கொரு சங்கத்துக்கு அனுசரணையாக இருப்பதாகச் சொல்லப்படும் அவர் மலையக மக்களுக்கு அதிகாரப்பரவலாக்கலில் இடமளிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்பதாக இல்லை.

கடந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் பெருமளவான மலையக மக்களின் வாக்குகளை ஐ.தே.கட்சியே பெற்றுக் கொண்டது. சில ஐ.தே.க. தமிழர்கள் சில பிரதேச சபைகளின் தலைவர்களாக இருக்கின்றனர். மத்திய மாகாண கல்வி அமைச்சர் வி.புத்திரசிகாமணி, ஊவா மாகாணசபை உறுப்பினர் வேலாயுதம் போன்ற ஐ.தே.கட்சியின் (இ.தே.தோ.தொ.ச) தொழிற்சங்கத்தலைவர்கள் மலையக மக்களின் இனத்தனித்துவம் பற்றி நிறையவே பேசுவார்கள்.

மலையக மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் அதிகாரப்பரவலாக்கல் பற்றி மிகவும் மோசமான பிரசாரத்தை ஐ.தே.கட்சியின் தலைவர்கள் செய்து வருகிறார்கள். மலையக மக்களுக்கு தங்களின் விவகாரங்களை தாங்களே செய்து கொள்ள எவ்வாறு அதிகாரப் பரவலாக்கலை வழங்குவது என்பது பற்றி ஐ.தே.கட்சிக்கு கவலையே இல்லை.

அரசாங்கத்தின் உத்தேச தீர்வு திட்டத்தின் மூலம் வடக்கும் கிழக்கும் தமிழர்களுக்கு பிரித்துக் கொடுக்கப்படவிருக்கிறது. அப்படி பிரித்துக் கொடுக்கப்பட்டால் மலையக மக்கள் யாவரும் மலையகத்திலிருந்து , விரப்பட்டுவிடுவார்கள் என்று ஐ.தே.கட்சியினரால் அச்சுறுத்தப்படுகின்றனர். ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினரான காதர் இவ்வாறான பிரசாரத்தை மேற்கொண்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே ஐ.தே.கட்சியை சுற்றிவலம் வந்து கொண்டிருக்கும் சில மலையகத் தமிழர்களுக்கு மலையக மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற இனரீதியான அடக்குமுறைகள் பற்றி உணர முடிவதில்லை. இ.தொ.கா. தலைவர்களுக்கோ அவர்களது பதவிகள், அந்தஸ்துகளை விட வேறொன்றையும் யோசிக்க முடிவதில்லை. ஐ.தே.கட்சியையோ, இ.தொ.காவையோ இன்னும் நம்பிக் கொண்டிருக்கும் பெரும்பான்மையான மலையக மக்களை காலத்துக்கு காலம் எவ்வாறு ஏமாற்றி அவர்களிடமிருந்து தொழிற்சங்க சந்தாப் பணத்தையும், வாக்குகளையும் பெறுவது என்பதிலேயே அக்கறை கொண்டிருக்கின்றனர்.

இதற்கு மாறாக 1970 களிலிருந்து மலையக மக்களின் இனத்துவம் பற்றிய கருத்தியல்கள் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. மலையக மக்களை ஒரு தேசிய சிறுபான்மை என்று சிலரும், தேசிய இனம் என்று அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று சிலரும் கோரிக்கைகள் விடுத்து வந்துள்ளனர்.

புதிய - ஜனநாயக கட்சி (இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) 1984 ஆம் ஆண்டின் நடத்திய அதனது முதலாவது தேசிய மாநாட்டில் மலையக மக்களை ஒரு தேசிய சிறுபான்மை என்று அங்கீகரிக்க வேண்டும் என்றும் மலையக மக்களுக்கு மலையகத்தில் சுயாட்சி உள்ளமைப்பும், உப உள்ளமைப்புகளும் ஏற்படுத்த வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1991 ஆம் ஆண்டில் நடைபெற்ற அக்கட்சியின் இரண்டாவது தேசிய மாநாட்டிலும், இரண்டாவது மலையகப் பிரதேச மாநாட்டிலும் மலையக மக்கள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு தேசிய சிறுபான்மை இனமாக அங்கீகரிக்கப்பட்டு அவர்களது தனித்துவங்களும் தன்னடையாளங்களும் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களின் உரிமைகளை உறுதிசெய்யும் வகையில் மத்திய, ஊவா சப்பிரகமுவ மாகாணங்களில் மலையக மக்கள் செறிவாக வாழும் பகுதிகளை இணைத்து ஒரு பலமான சுயாட்சி உள்ளமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் இப்பிரதேசத்திற்கு வெளியிலும், வடக்கு கிழக்கிலும் வாழும் இந்திய வம்சாவளி மக்களின் உரிமைகளை உறுதி செய்யும் வகையில் சுயாட்சி உப உள்ளமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1997 ஆம் ஆண்டு நடைபெற்ற புதிய - ஜனநாயக கட்சியின் மூன்றாவது தேசிய மாநாட்டில் நாட்டின் இனப்பிரச்சினையை பிரதான பிரச்சினை என்று எடுத்துக் கூறியதுடன் மலையக மக்கள் ஒரு தேசிய இனம் என்றும் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் மேற்படி சுயாட்சி உள்ளமைப்பும் மேற்படி (1991 மாநாட்டில் போன்று) சுயாட்சி உள்ளமைப்புகளும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1989ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மலையக மக்கள் முன்னணி மலையக மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும் என்றும், மத்திய, ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களில் மலையக மக்கள் செறிவாக வாழும் பகுதிகளை ஒன்றிணைத்து ஒரு தனி மாகாணசபையை ஏற்படுத்த வேண்டும் என்று கோரிவருகிறது.

இதைவிட பல தனிப்பட்ட பிரமுகர்களும், படித்தவர்களும் கூட மலையக மக்களுக்கு தனியான மாகாணசபை அல்லது பிராந்திய சபைகள் அவசியம் என்பதை கூறி வருகின்றனர்.

மலையக மக்களுக்கு அதிகாரப் பங்கீடோ, தனிமாகாணசபையோ, சுயாட்சிப் பிரதேசமோ தேவை இல்லை என்று வாதிடுபவர்கள் யாவரும் மலையக மக்களின் எதிர்காலம் பற்றி அக்கறையில்லாதவர்கள். அவர்கள் பெரும்பான்மை இனத்தலைவர்களின் மனம் புண்படாமல் நடந்து கொள்ள விரும்புபவர்கள் இன்று மலையக மக்களின் உரிமைகள் பற்றி பேசித் தள்ளுவதற்கு மட்டுமே யோக்கியதை உடையவர்கள்.

மலையக மக்களின் சுயநிர்ணய உரிமையில் அக்கறையுடையவர்கள், அமைப்பக்களின் எண்ணிக்கையில் குறைவாக இருப்பினும் அவர்களும் அவ் அமைப்புகளும் ஏதாவது பொது உடன்பாட்டிற்கு வருவதும், கோரிக்கையை வென்றெடுக்க ஐக்கியப்படுவதும் அவசியமாகும்.

அரசாங்கம் முன்மொழிந்துள்ள உத்தேச அரசியல் யாப்பிலேயே மலையக மக்களின் சுயாட்சியை உறுதிப்படுத்த அர்த்தமுள்ள, நேர்மையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மீண்டும் இலங்கையின் அரசியல் யாப்பு திருத்தப்படும் சந்தர்ப்பம் ஒன்று ஏற்படும். என்றோ, அச்சந்தர்ப்பம் ஏற்படும் போது மலையக மக்களுக்கு சுயாட்சியை பெற்றுக் கொடுக்கலாம் என்றோ நம்புவதும், மலையக மக்களை நம்பவைப்பதும் அரசியல் தீர்க்க தரிசனமற்ற செயலாகும்.

அத்துடன் பாராளுமன்றத்தில் பத்து மலையக எம்பிக்கள் இருந்து கொண்டு மலையக மக்களின் சுயாட்சியை அரசியல் அமைப்பில் உறுதி செய்ய முயற்சிகளை மேற்கொள்ளாவிடின் அதனை ஒரு வரலாற்றுத் துரோகமாகவே கொள்ள வேண்டிவரும்.

## ஒரு மலையக - மாணவனின் டயறி

எஸ்.உதயசூரியன்

***1.10.97 - 3.10.97***

புதன் பாடம் ஒன்றும் நடக்கவில்லை. சரஸ்வதி பூசைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது. வியாழன் பூசை நடந்தது. கடலை கொஞ்சமும், அவலும் கிடைத்தது. வெள்ளியும் அவ்வாறே பாடம் ஒன்றும் நடக்கவில்லை.

***6.10.97 - 10.10.97***

திங்கள் சர்வதேச ஆசிரியர் தினம் என்று பேசிக் கொண்டார்கள். மல்லிகைப் பூ தோட்டத்தில் உள்ள பாடசாலையில் ஆசிரியர் தின நிகழ்ச்சியாக, கருத்தரங்கு கோரிக்கைகள் நிறைவேற்றல் போன்றவை இடம் பெறவிருப்பதாக 'போஸ்டர்' ஒட்டியிருந்தார்கள். ஆசிரியர் உரிமை காப்போம்.அனைவரும் ஒன்றிணைவோம் என போஸ்டரின் கடைசியில் எழுதியிருந்தது. எங்களது பாடசாலையில் ஒவ்வொரு ஆசிரியரும் தலா 250/= சேர்த்து மிகப் பெரிய சரஸ்வதி பூசை நடத்தினார்கள். வடை, மோதகம், பொங்கல், முறுக்கு, அவல் என்று மேசையில் குவித்து வைத்திருந்தார்கள். 10 மணிக்கு ஆரம்பித்த பூசை 10.30 மணிக்கு முடிவடைந்தது. மாணவர்களுக்கு அவலும், பொங்கலும் கிடைத்தது. ஆசிரியர் எல்லோரும் 12 மணிக்கு ஒன்றாக அமர்ந்து சாப்பிடத் தொடங்கினர். 'சைவ சோறு' சாப்பாட்டு பார்சல்களும் வாங்கினார்கள். எல்லோரும் சாப்பிட்டு வெளியேற 3.00 மணியாகி விட்டது.

எல்லோரும் எழுந்தவுடன் அவ்விடத்தைக் கூட்டித் துப்பிரவு செய்தோம். எங்கள் பாடசாலையில் ஆசிரியர் தினம் 'அவித்துத் தின்பதாக'' நடந்து முடிந்தது. எனக்கு கவலையாக இருந்தது.

செவ்வாய், புதன் முறையே ஆண்டு எட்டு, ஒன்பது மாணவர்கள் நடத்தும் பூசையாகவிருந்தது. ஒவ்வொரு வகுப்பும் போட்டி போட்டுக் கொண்டு சோடணைகள் செய்தார்கள். அவல், கொஞ்சம் கிடைத்தது. வியாழன், வெள்ளி முறையே ஆண்டு 10, 11 நடத்தும் பூசையாக இருந்தது. 10 ஆண்டு மாணவர்கள் நடத்திய பூசைக்கு ஸ்பீக்கர் எல்லாம் போட்டிருந்தார்கள். ஒரு மாணவருக்கு 50/= வீதம் சேர்த்ததாக கூறினார்கள். 11 ம் ஆண்டு பூசை நடந்த போது அந்த வகுப்பு மாணவர்கள் சற்று கோபமாக இருந்தார்கள். முதல்நாள் இரவு சோடணை செய்வதற்காக ஸ்கூலில் நின்றபோது சாராயம் வாங்கி குடித்து விட்டு தூசணப்பாட்டு எல்லாம் படித்தார்களாம். சிவலிங்கம் அதனைக் கண்டு ஏசிய போது வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாம். குடியில் மூன்று மாணவரைத் தவிர ஏனையோர் அனைவரும் சேர்ந்து கொண்டார்களாம். எப்படியோ பூசை ஆஹா ஓகோ என்றிருந்தது. வீடியோவில் பக்திப் படம் போட்டுக் காட்டினார்கள். அதை நிற்பாட்டிவிட்டு அருணாச்சலம் படம் போடச் சொல்லி சில மாணவர்கள் கூச்சலிட்டார்கள். படம் இடையில் நிப்பாட்டப்பட்டது. இன்று அவலோ பொங்கலோ கிடைக்கவில்லை சனி பொதுப் பூசை இடம் பெறவிருப்பதாக பேசிக் கொண்டார்கள்.

***13-10-97 - 17.10.97***

திங்கள், செவ்வாய் ஸ்கூல்' முழுவதையும் கூட்டித் துப்புரவாக்கினோம். வாழை மரம், மாவிலை, தென்னந்தோரணம், வாழைப்பழத்தோல் என நிறைய குப்பை குவிந்தது. வியாழன், ஒவ்வொரு வகுப்பிலும் சேர்ந்த குப்பைகளை அள்ளிச் சென்று, மைதானத்திற்கு அருகிலுள்ள பள்ளத்தில் போட்டோம். வெள்ளி பாடசாலைக்குப் போகவில்லை. காரணம், இவ்வாரம் முழுவதும் படிப்பு நடக்காததுதான்.

***20.10.97 - 24.10.97***

திங்கள் தமிழ் வாசிப்பு பாடம் இடம் பெற்றது. செவ்வாய் சமயப் பாடத்தில் தேவாரம் மனப்பாடம் செய்தோம். ஒழுங்காக மனப்பாடம் செய்யாமையால், ரவியும், கோமதியும் சமய டீச்சரிடம் அடி வாங்கினார்கள். புதன் கடும் மழை பெய்தமையால் ஸ்கூல் போகவில்லை. வியாழன் தமிழ் எழுத்துப் பாடமும், வெள்ளி, சமய பாடமும் நடைபெற்றன. வியாழன் காலை சத்தியசாயிபபா பஜனை நடைபெற்றது.

***27.10.97 - 31.10.97***

திங்கள் மாணவர் வரவு குறைவு தீபாவளி வருவதால் நிறைய மாணவர் வீட்டிலிருந்து விட்டார்கள். நாங்கள் 10 பேர் சேர்ந்து 10 ஓவர் கிரிக்கட் விளையாடினோம். செவ்வாய் அம்மாவுடன் மகாபொல பார்ப்பதற்கு அட்டன் போனேன். விசேடமாக இருந்தது. அட்டனில் மிகப்பெரிய பாடசாலைகள் என்று கூறப்படும் பாடசாலைகள் இருக்க ஸ்ரீபாத மகாவித்தியாலயத்தில் மகாபொல நடப்பதற்கு காரணம் என்ன? என்று அம்மாவிடம் கேட்டேன். அதெல்லாம் 'நம்ம தலைவிதி' என்று ஒரேபோடாக போட்டுவிட்டார். புதன் பாடசாலை போகவில்லை. வியாழன் தீபாவளி கொண்டாடினோம். கொழும்பிலிருந்து சித்தப்பா வந்திருந்தார். அங்கு ஒரே 'செக்கிங்' என்று கூறினார். ஆட்களை அங்கே இங்கே அசைய விடாது செக் பண்ணுகிறார்களாம். ஐடின்காட் இல்லாத பல பொடியன்மார்களை அடைத்து விட்டதாக கூறினார். அவர்கள் வீட்டில் தீபாவளி அழுகையோடுதான் நடக்கும் என நினைத்து வேதனைப்பட்டேன். வெள்ளி பாடசாலை போகவில்லை.

நன்றி - நூலகத்திட்டம்



# அமெரிக்காவின் மிரட்டல்!

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தனிநாட்டுக் கோரிக்கையின் கீழ் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை சர்வதேச பயங்கரவாத இயக்கங்களில் ஒன்றாக அமெரிக்க ஏகாதிபத்தியம் பட்டியலிட்டுள்ளது. ஏனைய தமிழ் தீவிரவாத அமைப்புகள் 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதை அடுத்து ஆயுதப்போராட்டத்தை உத்தியோக பூர்வமாக கைவிட்டன.

உலகின் ஏனைய மாக்சிச கெரில்லா அமைப்புக்களையும், தேச விடுதலைப் போராட்ட இயக்கங்கள் பலதையும் அமெரிக்க ஏகாதிபத்தியம் அமெரிக்காவில் இயங்க முடியாது என்று பிரகடனம் செய்துள்ளது. இவ்வாறான பிரகடனத்தை அமெரிக்க ஏகாதிபத்தியம் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை செய்துவிடுவது வழக்கம். 14 வருடங்களுக்கு மேல் உக்கிரமான ஆயுத முரண்பாட்டில் மேல் ஈடுபட்டுவரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை இவ்வருடமே அமெரிக்கா தடை செய்துள்ளது.

இத்தடையானது தனது சாதனை என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் எடுத்துரைத்து மகிழ்ச்சியடைகிறார். ஐ.தே.க அரசாங்கத்தால் செய்ய முடியாததை பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் செய்துவிட்டதாக ஜனாதிபதி சந்திரிகா முதல் பின்வரிசை எம்.பி.மார் வரை பலர் தட்டிக் கொள்கின்றனர். அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் வடக்கில் முன்னேறி வரும் வேளையில் அதனது 'சமாதான முயற்சிகளுக்கு' கிடைத்திருக்கும் வெற்றி என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை தெரிவித்துள்ளார். இது அரசாங்கத்தின் சமாதான தீர்வுப் பொதிக்கு கிடைத்துள்ள வெற்றியென்றும், அரசாங்கத்தின் தீர்வுப் பொதியை ஏற்றுக்கொள்ளும்படியும் விடுதலைப்புலிகள் நிர்ப்பந்தப்படலாம் என்றும் அரசாங்க சார்பான அரசியல் பகுப்பாய்வாளர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.


அமெரிக்காவின் தடையினால் புலிகள் இயக்கத்திற்கு வெளிநாடுகளில் ஆதரவு குறைந்து அது பலவீனப்பட்டு விடலாம். இதனால் இச்சந்தர்ப்பத்தை சாதகமாக பயன்படுத்தி யுத்தத்தை தீவிரமாக நடத்தி புலிகளை அழித்தொழிக்க வேண்டும் என்று சிங்கள பேரினவாதிகள் கூச்சலிடுகின்றனர். அவர்கள் இனப்பிரச்சினை என்று எதுவும் கிடையாது என்றும் அதனால் அரசியல் தீர்வென்று எதுவும் அவசியமில்லை என்றும் இடித்துரைத்து வருகின்றனர்.

அமெரிக்காவின் தடை குறித்து அரசாங்கம் அளவுக்கு மீறி குதூகலிப்பதாலும், விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் பெரும் வெற்றியை கண்டுவிட்டது போன்றும் பிரசாரம் செய்வதாலும், 'விடுதலைப் புலிகளை ஒழிக்க வேண்டும் அதற்காக யுத்தத்தை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என்று பேரினவாதிகள் உரத்து கதைக்க வாய்ப்பு அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் தீர்வு பொதிக்கு எதிராக பிரசாரங்களை முன்னெடுக்க மனோரீதியாக அவர்கள் கிளர்ச்சியுற்றுள்ளனர்.

இதனால் யுத்தவாதிகளும், யுத்தம், சமாதானம் என்பன பற்றி இரண்டும் கெட்டான் நிலையில் தளம்பிக் கொண்டிருப்போரும் யுத்தத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டை வலியுறுத்தும் சூழ்நிலை மேலும் மேலும் பலமடைந்து கொண்டிருக்கிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற பேரில் சுதந்திரக்கட்சியுடன்

## பேரினவாதிகளின் கூச்சலும்...



## குறுகிய தமிழ் தேசியவாதிகளின் கெஞ்சலும்

ஒட்டிக் கொண்டிருக்கும் இடதுசாரி கட்சிகளோ புலிகள் மீதான அமெரிக்க தடை பற்றி மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். கடந்த 14 வருடங்களாக நடைபெறும் யுத்தத்தில் இத்தடை மிகவும் பெறுமதியானது என்று லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பெட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார். இதன் மூலம் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளினாலேயே கட்டப்பட்டு அண்மைக்காலம் வரை ஏகாதிபத்திய எதிர்ப்பொன்றை மட்டுமே பிரதானமாகக் கொண்டு இடதுசாரிக் கட்சியாக காட்டிக் கொண்டிருந்த அந்த அம்சத்தையும் அக்கட்சி இழந்துவிட்டது எனலாம்.

இத்தடை குறித்து மகிழ்ச்சி தெரிவிப்பதன் மூலம் லங்கா சமசமாஜக்கட்சிக்கு எந்த வகையிலும் குறைவானதல்ல என்பதை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி காட்டியுள்ளது. இதைவிட அரசாங்கத்துடன் இணைந்து கொண்டு இடதுசாரிகள் என்று காட்டிக் கொண்டிருப்பவர்களும் புலிகள் மீதான தடை குறித்து மகிழ்ச்சியடைகின்றனர்.

தமிழ் தலைவர்களில் புளொட் இயக்கத்தின் தலைவர் மாணிக்கதாஸன் மட்டுமே புலிகளின் மீதான அமெரிக்க தடையை எதிர்த்து அமெரிக்காவின் உலகப் பயங்கரவாதத்தை தோலுரித்துக் காட்டி அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். அமெரிக்க அரசாங்கம் தவறாக விளங்கிக் கொண்டு தம்மை தடை செய்து விட்டதாக விடுதலைப்புலிகள் இயக்கம் கவலை தெரிவித்திருந்தது. ஏனைய தமிழ்த் தலைவர்களும் கூட இத்தடையால் தீர்வு வேண்டி நிற்கும் தமிழ் மக்களுக்கு பாரிய பாதிப்புகள் ஏற்படுத்தப் போவதாக அஞ்சுகின்றனர். கவலை தெரிவிக்கின்றனர். சிலர் இத்தடையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கெஞ்சியுள்ளனர்.

அடக்குமுறைகளை முன்னெடுக்கின்ற அரசாங்கங்கள் ஏகாதிபத்திய அக்கறைகளுடனும் மேலாதிக்க அக்கறைகளுடனும் இணைந்து போகின்ற வரை அவ்வரசாங்கங்களுக்கு எதிரான போராட்ட இயக்கங்களுக்கு எந்தவொரு ஏகாதிபத்தியமோ, வல்லரசோ மேலாதிக்க வல்லரசோ ஆதரவளிக்கப் போவதில்லை. அடக்குமுறை அரசாங்கங்களை ஏகாதிபத்திய அக்கறைகளுக்கு அடிபணிய வைப்பதற்காகவே போராட்ட இயக்கங்களுக்கு தற்காலிகமாக ஏகாதிபத்தியங்களும், வல்லரசுகளும் ஆதரவளிக்கின்றன.

இலங்கை தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் கூட மேற்படி உண்மை நிரூபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் தமிழர் அமைப்புகளுக்கு ஆதரவளித்த இந்திய மேலாதிக்க வல்லரசு 1987 ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பிறகு - அதனுடைய மேலாதிக்கத்தை நிலைநாட்டக் கூடிய சூழ்நிலை ஏற்பட்ட பிறகு ஜே.ஆர். அரசாங்கத்திற்கு அதனது பூரணமான ஆதரவை வழங்கியது. இந்திய அரசாங்கத்தின் ஸ்திரமற்ற நிலைமையினாலும் சோவியத்யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு அமெரிக்காவை தனிப்பெரும் ஏகாதிபத்தியமாக்கியுள்ள புதிய உலக ஒழுங்கினாலும் இந்திய அரசாங்கம் இலங்கையின் இனப்பிரச்சினையில் வெளிப்படையாக தலையிடாத நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. இதனால் அமெரிக்க ஏகாதிபத்தியம் இலங்கை விவகாரங்களில் தலையிடுவதற்கு பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் தமிழ் பிரதேசங்களில் முன்னெடுத்துச் செல்லும் யுத்த நடவடிக்கைகளுக்கு ஆலோசனைகள், பயிற்சிகள், ஆயுத உதவிகள் என்பவற்றை வழங்குவதன் பின்னணியிலும், அமெரிக்க உற்பத்திகளுக்கு (ஆயுதங்கள் உட்பட) இலங்கையை பிரதான சர்வதேச சந்தையாக மாற்றுவதன் பின்னணியிலுமே புலிகளை பயங்கரவாத இயக்கம் என்று அமெரிக்கா பிரகடனப் படுத்தியுள்ளது.

உலகமயமாதல் தாராள பொருளாதாரம் என்பனவற்றையும் ஏகபோக இராணுவ வல்லமையை நிலைநாட்டுவதையும் வேலைத்திட்டமாக கொண்டுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலையீடு எதுவும் உள்நோக்கம் கொண்டதாகவே இருக்கும். நாடுகளின் சுதந்திரம், இறைமை ஒருமைப்பாடு என்பவற்றுக்கோ இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கோ, அடக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கோ ஆதரவாக அமெரிக்க ஏகாதிபத்தியம் எப்போதும் இருந்ததில்லை; இனியும் இருக்கப் போவதில்லை.

அதேவேளை சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை அல்லது இனவிடுதலை போராட்டத்தை முன்னெடுக்கும் போது சர்வதேச ரீதியாக தந்திரோபாயங்களை கையாள்வது அவசியம். ஆனால் ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்ய முடியாது என்பதும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்திலிருந்த உரிமைப் போராட்டங்களையும், விடுதலைப் போராட்டங்களையும் பிரிக்க முடியாது என்பதும் உணரப்பட வேண்டிய அடிப்படையான விடயமாகும்.

புலிகளின் ஆயுதப் போராட்டத்தில் ஏற்படுகின்ற தவறுகளாக கூறிக்கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தை இலங்கைக்கு வரவழைக்கும் அரசாங்கத்தின் திட்டங்களுக்கு இலங்கையின் முற்போக்கு, ஜனநாயக, இடதுசாரி, சக்திகள் பலியாகிவிடக் கூடாது. புலிகளை தடை செய்யும் பிரகடனத்துடன் இங்கு வரும் அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் பயங்கரவாதத்தை நாடெங்கும் நிகழ்த்த அதிக காலம் எடுக்காது என்பது உணரப்படல் வேண்டும்.

ஆயுதங்கள் உட்பட சகலவிதமான அமரிக்க குப்பைகளையும் குவிக்க இப்பிராந்தியத்தில் இலங்கை வாய்ப்பாக அமைந்துவிட்டது. இலங்கை அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான முரண்பாட்டை மேலும் கூர்மையடையச் செய்து பெருந்தொகையான ஆயுதங்களை இரண்டு தரப்புக்கும் அமெரிக்கா விற்றுத்தீர்க்கப் போகிறது. அத்துடன் இப்பிராந்தியத்தில் ஏகாதிபத்தியப் பிடியை இறுக்குவதற்கும் அமெரிக்கா சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

புலிகள் மீதான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தடை தற்போது புலிகளுக்கு எதிரானதாகவும் தமிழ் மக்களுக்குப் பாதகமானதாகவும் தோன்றினாலும் நீண்ட காலத்தில் இந்நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மலையக தேசிய இனங்களின் அபிலாசைகளுக்கும் எதிரான ஒன்றேயாகும். இலங்கை நாட்டின் சுதந்திரத்துக்கும், இந்நாட்டின் உழைக்கும் தொழிலாளி, விவசாயிகளுக்கும் எதிரான ஏகாதிபத்திய அடக்குமுறைகளுக்கான அடித்தளமிடப்பட்டுள்ளது என்பதையும் உணர்ந்து கொள்வது மிக அவசியமாகும்.

அத்துடன் சில தமிழ் தேசியவாத புத்திஜீவிகள் விளங்கிக் கொள்வது போன்று அமெரிக்க ஏகாதிபத்திய, முதலாளித்துவ வர்க்கத் தன்மையை மறந்து அல்லது மறுத்து தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்க அமெரிக்க உதவியைப் பெற முடியும் என்பதன் பொய்மையை விளங்கிக் கொள்ள வேண்டும்.

நமது அரசியல் நிருபர்

## புதைகுழிகளுக்கும் போராட வேண்டிய காலம்

பத்திரிகைச் செய்திகளில், தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகளும், காணிகளும், மரக்கறி தோட்டச் செய்கைக்கான காணிகளும், வாசிகசாலை ,சிறுவர் நிலையங்களை அமைப்பதற்கான காணிகள் எல்லாம் கொடுத்தாகிவிட்டது. இந்த அறிக்கைகளை எல்லாம் உண்மை என நம்பினால் ஏதோ முழு மலையக பிரதேசமும் தோட்டத் தொழிலாளர்களுக்கு சொந்தமாக கொடுத்து விட்டது போலிருக்கும்.

ஆனால் உண்மை என்னவெனில் தோட்டத் தொழிலாளர் தமது சக தொழிலாளருக்கும் குடும்ப உறவினருக்குமான புதை குழிகளுக்காக பெரும் போராட்ட மொன்றை செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பதுளை பகுதியில் இறந்த ஒரு பிள்ளையை புதைப்பதற்கு தோட்டத்தில் இடமளிக்காமையால், பெரும் பிரச்சினைக்கு முகம் கொடுத்த, தொழிலாளர்களுக்கு சிங்கள கிராமவாசிகளே தமது மயானத்தில் இடம் கொடுத்துள்ளார்கள்.

அண்மையில் கண்டி மருத்துவமனையில் காலமான ஒருவரை புதைப்பதற்கு எங்குமே இடம் கிடைக்காமையால், பெருந்தொகைப் பணத்தை செலவழித்து, பொது மயானத்தில் அடக்கம் செய்துள்ளனர். முறையான கருமகாரியங்களை செய்வதற்கோ, உறவினர் யாவரும் வந்து, சோகத்தில் கலந்து கொள்ளவோ முடியாமல் போய்விட்டது.

தோட்ட மயானங்கள், பல அழிக்கப்பட்டு, அதில் தேயிலைக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. சில தோட்டங்களில் இறப்பவர்களைப் புதைப்பதற்கு மேலதிக இடம் வழங்க கம்பனிகள் மறுக்கின்றன. இத்தகைய சூழலில் தொழிலாளர் ஒன்றுபட்டு, இறந்தவரை புதைப்பதற்கு, இடம் கேட்டு பெரும் போராட்டம் ஒன்றினை நடத்துவது அவசியமானதாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# தீர்க்கதரிசியின் உருவாக்கம் 2

## தந்தையும் மைந்தரும்



செல்வநாயகத்தைக் காட்டுவதற்கான தேவை முற்றிலும் தேர்தல் அரசியற் பிரசார நோக்கை உடையதே. சிங்களப் பேரினவாத அரசியல் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் அநாகரிக தர்மபால போன்றோருடனேயே தொடங்கி விட்டது. ஆட்சியிலிருந்த கொலனிய எசமானர்களுடன் கிறிஸ்துவ மத நிறுவனத் தலைமைகள் கொண்டிருந்த நல்லுறவும் மதமாற்றமும் சுதேசியக் கலாசாரத்தை இழிவாகக் கருதும் போக்கும் காரணமாக கிறிஸ்தவ மத நிறுவனங்கள் மீதான பகைமையைக் கொலனிய எதிர்ப்புடன் சேர்த்துக் கருத இடமிருந்தது. ஆயினும் இப்பகைமை மத பீடங்களுடன் மட்டுமானதல்ல. அது கிறிஸ்துவர்கள் மீதான பகைமையாகவும் தன்னை வெளிப்படுத்தியது. முஸ்லிம்கள் மீதான பகைமையும் இந்தக் காலத்தின் சிங்கள பௌத்த எழுச்சியுடன் சேர்ந்து எழுந்தன. சிங்களவர் - தமிழர் என்ற முரண்பாடு காலப்போக்கில் உருவாக்கப்படுவதற்கான சாடை இருந்தாலும் சாதிய முரண்பாடுகள் இரண்டு சமூகங்கட்குள்ளும் இருந்து வந்ததாலும் தமிழ் உயர்சாதி சிங்கள உயர்சாதி மேட்டுக்குடிகளுக்குமிடையே சமரசம் பேணப்பட்டது.

பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் இலக்குகளாக ஒவ்வொரு தேசிய சிறுபான்மை இனமும் அமையும் என்பது பற்றி 1930 - 40 காலகட்டத்தில் சிறுபான்மைத் தேசிய இனங்களின் தலைமைகட்கு விளங்காமலிருக்க நியாயமில்லை. ஜே.ஆர்.ஜயவர்த்தன சிங்களமே அரச கருமமொழியாக வேண்டுமென்று சட்டசபையில் பிரேரணையை முன்வைத்ததும் தொழிற்சங்கத் துறையில் இருந்த ஏ.ஈ.குணசிங்கவுடைய பச்சையான இனத்துவேஷமும் இந்திய வம்சாவழியினர் மீதான பகைமையும் பற்றி அறிந்த எவருக்கும் இந்த விதமான போக்கு எதிர்காலத்தில் எங்கே நம்மைக் கொண்டு போகும் என்று தெரியாமலிருக்க முடியாது. இதைத் தெரிந்திருக்க அதிக தீர்க்க தரிசனம் தேவையுமில்லை.

இதற்கு எவ்வாறு முகங் கொடுப்பது என்பதில் தேசிய சிறுபான்மை இனங்களின் 'தேசியவாத' அரசியற் தலைமைக்கும் இடதுசாரிகட்கும் ஒரு அடிப்படையான வேறுபாடு இருந்தது. பேரினவாதிகள் போலவே சிறுபான்மை இனங்களின் தேசியவாதத் தலைமைகளும் பிரச்சனையின் தீர்வைத் தமக்கு வசதியான ஒரு தேசிய அடையாளத்தினுள் தேடினார்கள். அந்த அடையாளங்களுட் பொதிந்திருந்த வர்க்க நலன்கள் யாரும் திட்டமிடாமலேயே கூட அவர்களது அரசியலில் தமது முத்திரையைப் பதித்திருந்தன. குறிப்பிடத்தக்களவு முற்போக்கான தலைமைகளால் உருவாக்கப்பட்ட அமைப்புக்கள் கூடக் காலப்போக்கில் எசமான வர்க்கத்தின் கையில் போய்ச் சேர்ந்ததற்கு மலையக மக்களது தொழிற்சங்க இயக்கம் ஒரு சான்று. தேசியவாதத்தின் முற்போக்கான நிலைப்பாடு நிபந்தனைக்கு உட்பட்டதும் வரலாற்றுச் சூழல்கள் ஏற்படுத்தும் தேவையால் ஏற்படுவதும் மட்டுமே சோஷலிஸ தேசியவாதம் என்பதிற் கூடத் தேசியவாதமே ஈற்றில் மேலோங்கிப் பல நாடுகளில் அதிகார வர்க்கத்தின் தேசியவாதமாகவே முடிந்ததை மீண்டும் மீண்டும் கண்டிருக்கிறோம். ஈழத் தமிழ்த் தேசியவாதத்தில் இந்த சோஷலிஸ அடையாளம் மிகவும் பலவீனமான ஒன்றாகவே இருந்து வந்தது. சிங்களப் பேரினவாதத் தலைமை பெரும்பான்மை இனத்தின் மேலாதிக்கம் என்ற நிலைப்பாட்டை ஒரு அர்த்தத்திலும் சிறுபான்மை தேசிய இனங்களது அடையாளத்தை நிராகரித்தல் என்பதை மறுஅர்த்தத்திலும் கொண்டிருந்தது.

சில இடதுசாரிகளும் இந்தச் சிங்கள பௌத்தக் கூறுகளைத் தம்முள் உள்வாங்கியிருந்தனர். ஈழத்துத் ட்றொட்ஸ்சியத்தின் தந்தை எனப்படும் பிலிப் குணவர்த்தன 1956 அளவில் இந்தச் சிங்கள பௌத்தத்திற்குட் சங்கமமாகத் தொடங்கி 1965ல் யூ.என்.பியில் இணைந்தார். இன்னொரு ட்றொட்ஸ்கிவாதியான கொல்வின் ஆர்.த.ஸில்வா ஒருகாலத்தில் பன்சாலைகளை இடித்து மலசல கூடம் அமைப்போம் என்று சொல்லியதும் 'இரு மொழிகள் - ஒரு நாடு, ஒருமொழி -இருநாடுகள்' என்று எச்சரித்ததும் நமக்கு நினைவிருக்கலாம். அதே கொல்வின் 1970 ல் தலதா மாளிகைக்கு பூக் கொண்டு போனதும் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளை மறுக்கும் விதத்தில் 1972ல் புதிய அரசியல் யாப்பை எழுதியதும் இன்னமும் கூட நினைவாயிருக்க வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளிருந்தும் பேரினவாதச் சேற்றுக்குள் விழுந்தவர்கள் இருக்கிறார்கள். அதுபோலவே ஈற்றில் தமிழ்த் தேசியவாதத்திற்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்ட வி.பொன்னம்பலம், மோதிலால்நேரு போன்றோரும் விரக்தி காரணமாக 'விடுதலை' இயக்க அரசியலில் விழுந்தவர்களும் இருக்கிறார்கள்.

எவ்வாறாயினும், இடதுசாரி அணுகுமுறை, தேசிய இனங்களின் சமத்துவம் ஒற்றுமை என்பனவற்றை வலியுறுத்தி வந்தது. இடதுசாரிப்' பார்வை என்று நாம் அடையாளங் காணக்கூடிய ஒரே விதமான பார்வை உலகில் எங்கும் இருந்ததில்லையென்ற போதும் மாக்ஸியச் சிந்தனை தேசிய இன ஒடுக்கலை வர்க்க ஒடுக்குமுறையின் அம்சமாகவே காணுவதால் அதற்கும் தேசியவாத அணுகுமுறைக்கும் அடிப்படையான வேறுபாடு இருந்தே வந்தது. அவர்கள் இலங்கையில் வலியுறுத்திய தேசிய ஐக்கியம் தேசம் பற்றி அவர்களது அனுபவரீதியாகவும் அணுகுமுறை சார்ந்தும் ஏற்பட்டதே. சமசமாஜக் கட்சி சிறுபான்மை இனங்களாகக் கண்டவர்களைத் தேசிய இனங்களாகக் காண மறுத்தது. கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மக்களைத் தேசியமெனவும் சிறுபான்மைத் தேசிய இனங்களது பாரம்பரிய பிரதேசங்கள் உள்ளதாயும் ஏற்றுக் கொண்டது.

தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் தமிழர் - சிங்களவர் என்ற அடிப்படையில் அதிகாரப் பகிர்வை வேண்டி நின்றனர். இந்த வகையில் முஸ்லிம்கள் பற்றியும் மலையகத் தமிழர் பற்றியும் அவர்களது பார்வை யாழ்ப்பாணமையமான ஒன்றாகவே இருந்தது. முஸ்லிம்களையும் மலையகத் தமிழர்களையும் தலைமை தாங்கி வழிநடத்துவதற்கான தகுதி தமிழ்த் தேசியவாதத்திற்கு என்றுமே இருந்ததில்லை. ஏனெனில் அத்தலைமை யாழ்ப்பாண உயர்சாதியினரது குறிப்பாக நிலவுடைமையாளர்கள், வியாபாரிகள், பெரும் உத்தியோகத்தர்கள் போன்றோரது நலன்களை முதன்மைப்படுத்திய தலைமை. இத்தகைய குறுகிய கண்ணோட்டத்தில் அரசியலை அணுகிய ஒரு பின்னணியில் தான் பொன்னம்பலத்தின் 50 க்கு 50 என்ற கோரிக்கை எழுந்து தமிழரல்லாதோரால் நிராகரிக்கப்பட்டது. அதே பொன்னம்பலம் 1947 தேர்தலில் வடக்கில் தமிழ்க் காங்கிரஸின் வெற்றிக்குத் தலைமை தாங்கினார். அதன் பின் சிங்களப் பேரினவாதத்தினதும் ஏகாதிபத்திய சார்பு அரசியலினதும் வாகனமாகிய யூ.என்.பி. அரசாங்கத்தில் கூட்டுச் சேர்வதற்காக மலையக மக்களது வாக்குரிமையும் குடியுரிமையும் பறிபோகத் துணையானார். இதற்குத் தனது ஆதரவை மறுத்த காரணத்திற்காவே பின்னர் செல்வநாயகம் ஒரு தீர்க்க தரிசியாகப் போற்றப்பட்டார். அவரது தீர்க்க தரிசனம் 'இன்று அவர்களுக்கு, நாளை நமக்கு' என்ற கூற்றே தமிழரசுப் பிரச்சாரகர்களால் மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டு வந்தது.

வடக்கு - கிழக்கு தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதிகளில் பெரும்பாலானோரது ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட பிரசாவுரிமைச் சட்டத்திற்கு சகல இடதுசாரிகளும் எதிர்த்து வாக்களித்தனர். அன்று ஒரு தமிழ் இடதுசாரியேனும் இருக்கவில்லை. வடக்கு - கிழக்கு பகுதியிலிருந்து ஒரு இடதுசாரியேனும் பாராளுமன்றத்துக்கு அனுப்பப்படவில்லை. இலங்கையின் இடதுசாரிகள் மிகவும் சரியாக நடந்து கொண்ட முக்கிய விடயங்களில் இது ஒன்று ஆயினும் தீர்க்க தரிசியாகக் காட்டப்படும் செல்வநாயகமும் பொன்னம்பலமும் செய்து கொண்ட ஏற்பாடு பற்றிப் பலரும் இன்று பேசுவதில்லை.

பிரசாவுரிமைச் சட்டம் பற்றிய பாராளுமன்ற வாக்கெடுப்பில் தமிழ்க் காங்கிரஸ் எவ்வாறு வாக்களிப்பது என்பது பற்றி அதன் தலைவர் பொன்னம்பலமும் செல்வநாயகமும் கருத்து வேறுபாடு கொண்டிருந்தனர். ஆயினும் மந்திரிப் பதவி பெற்றுத் தனது அரசியல் வலிமையை வளர்க்க விரும்பிய பொன்னம்பலம் இந்த விடயத்தில் யூ.என்.பி, ஆட்சியுடன் ஒத்துப் போகவே விரும்பினார். பூரண ஒத்துழைப்பை அவரால் பெற்றுக் கொடுக்க இயலாது போனால் அவருக்குப் பதவி கிட்டாது என்பது உறுதி.

பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க தமிழ்க் காங்கிரசுக்கு ஒரே ஒரு முழு மந்திரிப் பதவி மட்டுமே தர ஒப்புக் கொண்டதாயும் அது பொன்னம்பலத்துக்கே போகும் பட்சத்தில் தனக்கு எதுவும் இல்லை என்று தான் செல்வநாயகம் பிரசாவுரிமைச் சட்டத்தை எதிர்க்க நேர்ந்தது என்ற வாதம் தமிழ்க் காங்கிரஸ் வட்டங்களில் முன்வைக்கப்பட்டது. இது மக்கள் மத்தியில் எடுபடவில்லை. செல்வநாயகம் தமிழ்க் காங்கிரஸிலிருந்து விலகிய போது மிகவும் குறைவானதொகையினரே அவரோடு சென்றதும் மலையக மக்கள் பற்றிய பிரச்சினை, 1956ம் ஆண்டுத் தேர்தலில் செல்வநாயகம் தீர்க்கதரிசியாகக் காட்டப்படும் வரை வடக்கு - கிழக்கு அரசியலில் முக்கியத்துவம் பெறாததும் இதற்கான காரணங்களாக இருக்கலாம். ஆயினும் திரைமறைவிலேயே பேரங்கள் நிகழ்த்தப்படும் அரசியற் சூழலில் உண்மை பொய்களை உறுதி செய்வது கடினம்.

பிரசாவுரிமைச் சட்டத்தில் பொன்னம்பலம் ஒத்துழைப்பதாயின் அவரது கட்சியிலிருந்து அந்தச் சட்டவாக்கத்துக்கு எவருமே எதிர்த்து வாக்களிக்காமல் இருக்க வேண்டும் என்ற தேவை இருந்தது. இதை அவரால் உறுதிப்படுத்த இயலாது போயிற்று. எனவே டி.எஸ்.சேனநாயக்கவுடன் செய்த பேரத்தின்படி -அதிகபட்சம் ஒருவர் மட்டுமே எதிர்த்து வாக்களிப்பார் என்று ஏற்பாடாயிற்று. ஆயினும் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே செல்வநாயகத்தினளவுக்கோ அதைவிட அதிகமாகவோ இந்தப் பிரசாவுரிமைச் சட்டத்தை எதிர்த்த வன்னியசிங்கமும் இருந்தார். அவரால் எந்த நிலையிலும் இந்த அநீதிக்கு எதிராக வாக்களிக்க முடியாது என்பது தெளிவான பின்பு செல்வநாயகம் எதிர்த்தும் வன்னியசிங்கம் தவிர்ந்த ஏனையோர் ஆதரித்து வாக்களிப்பது என்றும் முடிவாயிற்று. வன்னியசிங்கம் வாக்களிப்பில் பங்குபற்றாத விதமாக ஏற்பாடு செய்யப்பட்டது. மூதவையில் தமிழ்க் காங்கிரஸின் உறுப்பினரான ஈ.எம்.வி. நாகநாதன் எதிர்த்து வாக்களித்தார்.

தமிழரசுக் கட்சியினர், பின்னாளில் இந்தப் பிரசாவுரிமைப் பிரச்சினையில் செல்வநாயகம் பொன்னம்பலத்தை எதிர்த்துப் போராடி மறுத்து வாக்களித்தார் என்று சுட்டியெழுப்பிய படிமம் முற்றிலும் உண்மை சார்ந்ததல்ல. செல்வநாயகம் இப்பிரச்சினையில் கருத்து வேறுபட்டது வறவேற்க வேண்டிய விடயம் தான். ஆயினும் தீர்க்க தரிசனம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு அரசியல் ஞானத்தினால் உண்டான நிலைப்பாடு அது என்றால், தீர்க்கதரிசியான செல்வநாயகம் பின்னர் ஒவ்வொரு முக்கியமான திருப்பத்திலும் விட்ட தவறுகளும் 1970 ல் ''இனிமேல் தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்'' என்று சொன்ன சொல்லும் ஒரு தீர்க்கதரிசியின் சிந்தனையை வெளிப்படுத்தவில்லை. இவை பற்றி இனிவரும் பகுதிகளிற் கவனிப்போம்.

ஒரு தமிழ்த் தேசிய கட்சியாக இருந்த தமிழ்க் காங்கிரஸ் ஒத்த மனத்துடன் இந்திய வம்சாவழித் தமிழர்களது உரிமைக்காகக் குரல் கொடுக்க முடியாமையுடன் இடதுசாரிகளது நடத்தையை ஒப்பிடுவோம். பல கட்சிகளாகவும் உட்கட்சிப் பிளவுகளுடனும் திணறிக் கொண்டு இருந்த ட்றொட்ஸ்கிவாதிகள் கூட, கம்யூனிஸ்டுகளுடன் இணைந்து நின்றது அவர்களது மாக்ஸியத்தின் குறைபாடுகளின் மத்தியிற் கூட அவர்களாற் தமிழ்த் தலைவர்களை விட நியாயமான நிலைப்பாட்டை எடுக்க முடிந்தது நாம் கவனிக்க வேண்டிய விஷயம்.

அடுத்துவரும் கேள்வி, இந்தப் பிரச்சனையைக் காரணம் காட்டிப் பிரிந்தவர்கள் உருவாக்கிய தமிழரசுக்கட்சியால் ஏன் அதே பிரச்சனையில் உறுதியாக நின்ற இடதுசாரிகளுடன் தமது அரசியல் உறவை வளர்க்க முடியவில்லை என்பதுதான். இந்த விதமான சிந்தனை தமிழரசுக்கட்சியில் ஒரு சிலரிடம் இருந்தது. ஆயினும் அது சிறுபான்மைப் போக்காகி நாளடைவில் மங்கி விட்டது.

யாழ்ப்பாணத்தில் 1953 ஹர்த்தாலை ஆதரித்துத் திரு.வன்னியசிங்கம் செயற்பட்டது இங்கு குறிப்பிட அவசியமான ஒரு விடயம். தமிழரசுக் கட்சியின் இடதுசாரிகளாகவே ஒரு காலத்தில் அமிர்தலிங்கமும் வி.என்.நவரத்தினமும் கருதப்பட்டனர். ஆயினும் பாராளுமன்றப் படியேறிய பின்பு, இடது சாரி எதிர்ப்பில் மும்முரமாக நின்றவர்களில் அமிர்தலிங்கமும் ஒருவராகி விட்டார்.

தமிழரசுக்கட்சியின் கொள்கைகளில் ஒன்று சோஷலிஸம் என்றும் கட்சியின் உருவாக்கத்தின் போது, ஒரே ஒரு வாக்குப் பெரும்பான்மையால் அக்கொள்கை ஏற்கப்பட்டதாகவும் செல்வநாயகம் அதற்கு ஆதரவு தந்ததாகவும் பலரால் முன்னர் கூறப்பட்டிருக்கிறது. இந்தத் தமிழரசு சோஷலிஸம் 1956க்குப் பிறகு நடைமுறையில் எப்படி இருந்தது என்பது பற்றியும் பார்ப்போம்.

இமயவரம்பன்

நன்றி - நூலகத்திட்டம்






# கொலைகள் மலிந்த நாடு!

நமது நாடு இன்று கொலைக்களமாகி நிற்கிறது. கொலைகள் மலிந்த உலக நாடுகளின் மத்தியில் முக்கிய இடத்தை வகிக்கும் ஒன்றாகக் காணப்படுகிறது. கொல்லாமை பற்றியும் அன்பு கருணை பாவ புண்ணியம் பற்றி உயர்வாகப் பேசிக் கொள்ளப்படும் அல்லது போதனைகள் நடாத்தப்பட்டு வரும் இந்நாட்டிலேதான் கொலைகள் பல வடிவங்களில் நாளாந்தம் புரியப்பட்டு வருகின்றது. இக் கொலைகளில் இரண்டுவிதமான கொலைகளே பெரும் போக்காகி நிற்கின்றன. ஒன்று திட்டமிட்டே ஒருவர் மற்றவரை கொன்று அழிப்பது. இரண்டாவது தன்னைத் தானே கொன்று கொள்வது. மொத்தத்தில் இக் கொலைகள் யாவும் சமூக முரண்பாட்டுக் காரணிகளின் விளைவானதேயாகும். எனவே தான் சகல விதமான கொலைகளையும் நிறுத்துவதற்கான பரந்துபட்ட மக்கள் இயக்கம் அவசியப்படுகின்றது.

நமது நாட்டின் கொலைப் பட்டியலைப் புரட்டிப் பார்த்தால் அதில் சம்பந்தப்பட்டவர்களை வரிசைப் படுத்திக் கொள்ள இயலும். அரசாங்கத்தின் ஆயுதப்படைகள், அரசியல் கட்சிகளின் குண்டர்கள், ஜே.வி.பி இயக்கத்தினர், சகல தமிழ் ஆயுத இயக்கங்கள், அவர்களுக்கு வழிகாட்டிய தமிழர் தலைமைகள், பாதாள உலகக் காடையர்கள் முதலியோரைக் குறிப்பிடலாம்.

இத்தகைய கொலைக்களம் 1971 ம் ஆண்டு இடம் பெற்ற ஜே.வி.பி.யினரின் ஏப்பிரல் கிளர்ச்சியுடன் ஆரம்பமாகியது. அன்று தொடங்கிய கொலைத் தொழில் அரசியல் ஆட்சி அதிகார தேவை கருதி விரிவுபடுத்தப்பட்டே வந்துள்ளது. அன்றைய இலங்கையின் ஆயுதப் படையின் எண்ணிக்கையும் அதன் ஆயுத தளபாட வசதிகளும் மிகத் தாழ்ந்த நிலையிலேயே காணப்பட்டன. அதனைக் கருத்திற் கொண்டே அன்று ஜே.வி.பியினரின் ஒரே நாளில் சகல இடங்களிலும் தாக்குதல் நடாத்தி ஆட்சியைக் கைப்பற்றும் உபாயம் கைக் கொள்ளப்பட்டது.

ஆனால் அதன் விளைவு எதிர் மறையாகியது. இலங்கையின் ஆயுதப்படைகளும் வெளிக்காட்டாத இந்தியப் படையணிகளும் அக்கிளர்ச்சியை முறியடித்து இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தன. குத்து மதிப்பாக இருபதினாயிரம் இளைஞர்கள் யுவதிகள் கொன்றழிக்கப்பட்டனர். இந்த நூற்றாண்டின் சமகால அரசியல் வரலாற்றில் அதுவே முதலாவதான ஆயுதப்படைகளின் அரசியல் படுகொலை வதையாகியது.

அதன் பின் 1977ம் ஆண்டிலிருந்து 1983ம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஜே.ஆரின் தலைமையிலான நான்கு இன வன்செயல்கள் ஆயுதப் படைகளின் திட்டமிட்ட மேற்பார்வையில் தமிழர்களுக்கு எதிரான கொலைகளாகின. நாடு முழுவதிலும் சுமார் ஐயாயிரம் பேர்வரை கொல்லப் பட்டனர்.

1988 - 89 காலப்பகுதியில் ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் மீண்டும் ஜே.வி.பி. இயக்கத்திற்கு எதிரான ஆயுதப்படைகளின் நடவடிக்கையின் பெயரால் சுமார் அறுபதினாயிரம் பேர்வரை கொன்றொழிக்கப்பட்டனர். இதில் ஜே.வி.பியினர் உட்பட யூ.என்.பி. விரோத எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டனர். அதேவேளை ஜே.வி.பியினர் தமக்கு விரோதம் எனக் கண்டவர்களை எல்லாம் அழித்துக் கட்டினர்.

1983ம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான பதிநான்கு ஆண்டுகளில் இனவிடுதலைப் போராட்டம் காரணமாகக் கொல்லப்பட்டவர்களின் சரியான எண்ணிக்கை வெளிக் கொணரப்படவில்லை. ஆனால் வடக்கு கிழக்கில் சுமார் அறுபதினாயிரம் பேர்வரை கொல்லப்பட்டிருப்பர் என மதிப்பிடப் படுகிறது. இக்கொலைகளில் பெரும் பகுதியினரை ஆயுதப் படைகளே கொன்று குவித்தன. அதேவேளை ஆயுதம் தாங்கிய ஒவ்வொரு தமிழ் அமைப்பும் தமக்கு விரோதம் என்று கருதப்பட்டவர்களை சமூக விரோதிகள் மாற்றுக் குழுவினர் எனக் கூறி வடக்கு கிழக்கில் கொன்றனர். இன்று வரை இக்கொலை நிகழ்ச்சிப் போக்கு தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இவற்றை விட அன்றாடம் தொழிலாளர்கள் விவசாயிகள் என்போர் தமது உரிமைகளை முன்வைத்தமைக்காக அவ்வப்போது கொல்லப்பட்டு வந்துள்ளனர். குறிப்பாக வர்த்தக வலயங்களில் திட்டமிட்டும், விபத்துக்களினாலும் தொழிலாளர்கள் கொல்லப் பட்டுள்ளனர். நீதி நியாயம் கேட்ட போதெல்லாம் துப்பாக்கிகளே அவர்களுக்குப் பதிலிறுத்து நின்றன.

அதேவேளை கொலைகளின் மற்றொரு வடிவமான தற்கொலை நிகழ்வுகள் உலகின் அதிக கவனத்தை ஈர்க்குமளவிற்கு இலங்கையில் இடம் பெற்று வந்துள்ளன. இன்றும் அவை குறைந்ததாகத் தெரியவில்லை. சமூகப் பிரச்சினைகளின் பாரிய தாக்கமே இத்தற் கொலைகளின் பின்னணியாகும். வறுமை வேலை இன்மை பட்டினி கொடிய நோய் போன்றவை ஏற்படுத்திய வெறுப்பும் விரக்தியுமே பெரும்பாலான தற்கொலைகளுக்கு காரணம் எனக் கண்டறியப் பட்டுள்ளது. இவ்வாறு கடந்த பதினான்கு ஆண்டுகளில் மட்டும் எழுபதினாயிரம் பேர்வரை தற் கொலை புரிந்துள்ளனர் எனப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இத்தொகையில் இருபது வயதிற்கும் நாற்பத்தைந்து வயதிற்கும் இடைப்பட்டவர்களே அதிகமானவர்கள் என்பதும் கூடுதலானவர்கள் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். இத்தற் கொலைகளுக்கு ஒவ்வொரு காரணங்கள் கூறப்பட்டாலும் பொதுவாகவே இன்றைய சமூக அமைப்பின் ஏற்றத்தாழ்வும் ஏகப் பெருவாரியான மக்களுக்கு உரிய தேவைகளை வழங்க முடியாத இயலாமையின் வெளிப்பாடாகவே அவை இடம் பெற்று வருகின்றன. ஒரு மனிதனை மற்றொரு மனிதன் கொலை செய்வது எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியாதோ அதே போன்றதே ஒருவர் தன்னைத் தானே கொலை செய்வதையும் ஏற்றுக் கொள்ள முடியாது என நவீன சமூகங்கள் வரையறை செய்துள்ளன. ஆனால் கொலைகளும் தற்கொலைகளும் நமது நாட்டில் மலிந்தவையாகியே உள்ளன.

கடந்த கால்நூற்றாண்டுப் பகுதியில் இலங்கை முழுவதிலும் சுமார் இரண்டு லட்சத்தி நாற்பத்தையாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆயுதப்படைகளினால் அதிகளவுக்கு மக்கள் கொலையுண்டுள்ளனர். அடுத்ததாக ஆயுதம் ஏந்திய இயக்கங்கள் அனைத்தினாலும் கணிசமான தொகையினர் அழிக்கப்பட்டனர். மேலும் அரசியல் கட்சிகளின் குண்டர்கள் பாதாள உலகத்தினர் என்போராலும் அரசியல் பழிவாங்கல் கொலைகளுக்கு பல நூற்றுக்கணக்கில் அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், பத்திரிகையாளர்கள் எனப் பலர் கொலையுண்டனர். பௌத்த தர்மம் பௌத்த கலாசாரம் எனப் புகழ் பாடப்பட்டு வரும் இலங்கையில் ஆயுத கலாசாரம் அரசாங்கங்களினாலேயே வளர்க்கப்பட்ட நிலைமையானது சில சமூக முரண்பாட்டு அடிப்படை உண்மைகளையே எடுத்துக் காட்டுகிறது.

ஆதலால் கொலைகளுக்கு எதிரான மக்கள் இயக்கங்கள் மூலமாக மட்டுமே சகலவகைக் கொலைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்க முடியும். நாட்டின் இனங்கள் சமூகங்கள் தொழிலாளர்கள் விவசாயிகள் இளைஞர் யுவதிகள் மற்றும் அனைவரினதும் பிரச்சினைகள் தீர்க்கப்படாமை முக்கிய விடயமாகும். நியாயமான வழிகளில் அவற்றைத் தீர்ப்பதற்கும் பதிலாக கொலைகளை ஒரு வழிமுறையாக்கியதன் விளைவே நாடு இரத்த ஆறு ஓடும் கொலைக்களமாகி உள்ளது. இந்நிலையில் கொலைகளுக்கு எதிராக வாழ்க்கைக்கு உயிர் ஊட்டும் இயக்கம் பல முனைகளில் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

***கடந்த மாதம் 2 ம், 3 ம் திகதிகளில் கோட்டை புகையிரத நிலையம் முன்பாக இடம் பெற்ற ‘கொலைகளுக்கு எதிராக வாழ்க்கைக்கு உயிரூட்டுவோம்’ என்னும் வலயத்தில் நம் அமைப்பினர் நடாத்திய நிகழ்ச்சிகளின் இறுதிநாள் முடிவில் புதிய ஜனநாயக கட்சியின் பொதுச்செயலாளர் சிகா. செந்திவேல் ஆற்றிய உரையின் சாராம்சமே கட்டுரை வடிவில் தரப்பட்டுள்ளது.***

| கடந்த 25 ஆண்டுகளில் கொலையுண்டவர் தொகை | |
|---|---|
| 1971 ன் ஏப்பிரல் கிளர்ச்சியில் | 20,000 பேர் |
| 1977 ன், 79 ன், 81 ன், 83 ன் இனவன்செயலில் | 5,000 பேர் |
| 1987 ன், 88 ன், 89 ன் ஜே.வி.பி. எதிர்ப்பில் | 60,000 பேர் |
| 1983 - 97 வரையான இன யுத்தத்தில் | 70,000 பேர் |
| 1971 - 97 வரையான தற்கொலை | 90,000 பேர் |
| மொத்தம் | 245,000 பேர் |

## மிதி வெடிக்கும் பலியாகும் வடபகுதி மக்கள்

ஒரு காலத்தில் குடாநாடு பல்வேறு விடயங்களுக்கு பெயர் பெற்று விளங்கியது. ஆனால் இன்று உயிர் உடமை அழிவுகளுக்கும் துன்பியல் சம்பவங்களுக்குமே பெயர் கேட்டு நிற்கிறது. முக்கியமானதொரு நாளாந்த துன்பியல் செய்தியாகக் குடாநாட்டிலிருந்து வந்து கொண்டிருப்பது மிதிவெடிக்கு ஆளாகிக் கால்களை இழந்து வரும் மக்கள் பற்றியதேயாகும். பெரும்பாலும் கால்களை இழப்பதுடன் சிலர் அதனால் மரணமடைந்தும் உள்ளனர்.

குடாநாட்டின் வீட்டு வளவு, தெருவோரங்கள், தோட்டங்கள், வயல்கள் விளையாட்டு மைதானங்கள் எங்குமே இம்மிதிவெடி அபாயத்துக்கு மக்கள் உள்ளாகி வருகின்றனர். ரிவிரச இராணுவ நடவடிக்கைக்குப் பின் மீட்கப்பட்ட பிரதேசத்தினுள் மீளக் குடியமரச் சென்ற மக்களே நாளாந்தம் இம் மிதி வெடிகளினால் கால்களை இழந்து வருகின்றனர். இம்மிதி வெடிகள் ராணுவத்தினாலும் அவர்களை எதிர்த்துப் போராடிய புலிகள் இயக்கத்தினாலும் புதைக்கப்பட்டவைகளாகும். இவை எங்கே புதைக்கப் பட்டுள்ளன என்பதை கண்டுபிடித்து விடமுடியாது. வெடித்த பின்பே அவ்விடம் தெரியவரும். இம்மிதி வெடிகள் இரண்டு வகையான ஆபத்தை விளைவிக்கக் கூடியன. ஒன்று காலின் பாதத்தை இல்லாமல் செய்து விடும் தன்மை கொண்டது. மற்றையது முழங்காலுக்கு கீழ் உள்ள பகுதியை முற்றாகவே சிதறச் செய்து விடும். இவ் ஆபத்து நிறைந்த மிதி வெடிகளினால் சிறுவர்தொட்டு வளர்ந்தோர் வரை நாளாந்தம் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். அண்மைக் காலங்களில் குடாநாட்டில் விவசாய முயற்சிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படுவதால் அந் நிலங்களில் புதைக்கப்பட்ட மிதிவெடிகளுக்கு விவசாயிகளும் - விவசாயத் தொழிலாளர்களும் அதிகளவு ஆளாகி வருகின்றனர். தமது அன்றாட உழைப்பிற்காகச் செல்லும் இத் தொழிலாளர்கள் கால்களை இழந்து கொள்ளும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர். ஒருவர் கால்களில் ஒன்றையோ அல்லது இரண்டையுமோ இழந்தால் பின் வாழ்க்கையின் அர்த்தம் முழுவதையுமே இழந்தவராகி விடுகிறார். ஒரு சிறுவன் சிறுமி கால்களை இழக்கும் போது எதிர்காலமே சூனியமாகி விடுகிறது. ஒரு வளர்ந்த ஆண் பெண் கால்களை இழக்கும் போது அவர்களில் தங்கி வாழும் குடும்பங்களே அவல வாழ்வுக்குள் தள்ளப்பட்டு விடுகிறார்கள். இவை எல்லாம் யுத்தத்தை முழு மூச்சாக முன்னெடுக்கும் பேய் பிசாசுகளுக்கு எங்கே புரியப் போகிறது.

எங்கே எப்போது யாருக்கு மிதிவெடியினால் ஆபத்து வரும் என்று கூறமுடியாத அளவுக்கு மிதிவெடி அபாயம் குடாநாடு முழுவதும் வியாபித்து நிற்கிறது. மிதிவெடிகள் கண்ணி வெடிகள் என்பனவற்றை அகற்றுவதற்கென ஐ.நா.நிபுணர் குழு குடாநாட்டிற்கு வர இருப்பதாகச் செய்தி வெளியாகி உள்ளது. இது மக்களுக்கு ஒரு சிறு ஆறுதல் செய்தியாகலாம். ஆனால் எவ்வாறு எங்கெங்கே புதைக்கப்பட்டுள்ளன என்பதைக் கண்டு பிடித்து அழிப்பது என்பது நடைமுறைச்சார்ந்த பெரும் பிரச்சினையேயாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# கண்ணீரில் கடந்து சென்ற ஏழு ஆண்டுகள்

ஏ.எம்.நௌஷாத்

1990 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதப் பிற்பகுதி வடபுலத்து முஸ்லீம் மக்களுக்கு பேரிடி ஒன்று வீழ்ந்தது. குறிப்பிட்ட சில மணி நேரத்திற்குள் உடமைகள் எதுவுமின்றி சிறு தொகைப் பணத்துடன் சகல முஸ்லீம்களும் தத்தமது பாரம்பரிய வாழ்விடங்களில் இருந்து வெளியேறிவிட வேண்டும் என்பது தான் அவ் அதிர்ச்சிக்குரிய பேரிடியாகும். இவ் அறிவிப்பை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்து துப்பாக்கி முனையில் தாமே முன்னின்று அதனை நடைமுறைப்படுத்தி வடபுல முஸ்லீம்களை வவுனியாவிற்கு அப்பால் அகற்றி வைத்தனர். இந்நிகழ்வு வரலாற்றில் வடபுலத்து முஸ்லீம்களுக்கு என்றுமே ஏற்பட்டிராத ஒன்றாகியது. அதேவேளை தமிழர்களின் வரலாற்றில் அதுவும் தேசிய இனவிடுதலைப் போராட்டக் கட்டத்தில் நியாயப்படுத்த முடியாத கறையாகவும் தலைகுனிவாகவும் ஆகிக் கொண்டது. இத்தகைய வரலாற்று அவப்பெயர் பெற்ற ஒரு முடிவை விடுதலைப்புலிகள் அன்று ஏன் எடுத்துக் கொண்டார்கள் என்பதற்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய தகுந்த காரணம் எதுவுமே கூறியதில்லை. இன்றும் தான் நாம் வெளியேற்றப்பட்டோம். நாம் செய்த குற்றம் தான் என்ன? என்றே வடபுலத்து முஸ்லீம் மக்கள் கேட்கிறார்கள். ஆனால் அண்மைய காலத்தில் தான் முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்ட செயலுக்கு புலிகள் இயக்கம் வருத்தம் தெரிவித்துக் கொண்டது. நடக்கக் கூடாத ஒன்று நடந்து விட்டது என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறது.

இவை எல்லாம் கடந்து போன முடிந்து போனவை என்பது ஒரு புறமிருக்க இன்று ஏழு ஆண்டுகளைக் கண்ணீரால் கடந்து நிற்கும் அவர்களுக்கு என்ன எதிர்காலம் என்பதே பிரதான கேள்வியாகும். வடபுலத்து முஸ்லீம்கள் இத்தனை அவல வாழ்வுக்கு மத்தியிலும் வடக்கே தமது தாயகம் என உறுதியுடன் இருந்து வருகிறார்கள். தமிழர்களோடு எவ்வித பிணக்குமின்றி சகோதரர்களாக ஆண்டாண்டு காலம் வாழ்ந்து வந்ததை அவர்கள் இனிமேலும் கைவிடத் தயாராக இல்லை. புத்தளத்து கனல்கக்கும் கட்டாந்தரையில் வெறும் வாழ்க்கை வாழ்ந்து இன்னல்கள் பட்டு வரும் இன்றைய நிலையிலும் தமது சொந்த வாழ்விடங்களில் வாழ்வதையே ஒவ்வொரு முஸ்லீம் மனிதனும் மனிசியும் விரும்புகிறார்கள். ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் தமது எதிர்காலம் வடபுலத்து மண்ணிலேதான் நிலைக்க வேண்டும் எனக் கருதுகிறார்கள். இத்தகை விருப்பத்தை அவாவை, அபிலாஷையை நிறைவேற்றி வைக்க வேண்டியது தான் சகல தரப்பினரதும் கடமையாகும்.

சில முஸ்லீம் தலைவர்களை வடக்கே செல்லக் கூடாது. கிழக்கில் நிரந்தரமாகிக் கொள்ள வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் பேசி வருகிறார்கள். இதனை வடபுலத்து முஸ்லீம்கள் நிராகரித்து வருகிறார்கள். அண்மையில் வடபுலத்து முஸ்லீம்களில் சிலர் யாழ்ப்பாணம் சென்று வந்துள்ளார்கள். அவர்களை தமிழ் சகோதரர்கள் வரவேற்று மீளவந்து குடியமரும்படி வேண்டியுள்ளார்கள்.

இந்நிலையில் தகுந்த உத்தரவாதத்துடனும், மீள்குடியேறலுக்கான அடிப்படைகளுடனும் செல்வதையே பெரும்பாலான வடபுலத்து முஸ்லீம் மக்கள் விரும்புகிறார்கள். அதன் மூலமே இழந்து போன வாழ்வை கட்டியெழுப்பலாம் என நம்புகிறார்கள். அது மிகவும் நியாயமானதேயாகும்.

எனவே விடுதலைப்புலிகள் தமது ஆதரவை ஏழாண்டுகளாக இன்னலுற்றுவரும் வடபுலத்து முஸ்லீம்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அரசாங்கம் அவர்களுக்குரிய புனர்வாழ்வை உத்தரவாதப்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் எச்சந்தர்ப்பத்திலும் இணக்கம் காணப்படும் அரசியல் தீர்வில் வடபுலத்து முஸ்லீம் மக்களது உரிமைகளுக்குரிய வரையறைகள் வகுத்துக் கொள்ளப்படவேண்டும்.

அவ்வாறு வகுக்கப்படுவதன் அவசியத்தை பெயர்பெற்று நிற்கும் முஸ்லீம் தலைவர்கள் எந்தளவிற்கு உள்வாங்கிக் கொள்வார்கள் என்பது பிரச்சினைக்குரியதேயாகும். ஆனால் வடபுலத்தின் பல்வேறு பிரதேசங்களில் இருபதினாயிரம் குடும்பங்களுக்கு மேற்பட்ட ஒரு லட்சத்திற்கு அதிகமான முஸ்லிம் மக்களின் இருப்பையும் வாழ்வையும் அரசியல் உரிமைகளையும் உறுதிப்படுத்துவது அவசியம். அதற்குரிய உறுதியான குரல் முன்வைக்கப்படுவது இன்றைய தேவையாகும்.

# குடாநாட்டில் கண்டதும் கேட்டதும்

✱ குடாநாட்டில் தற்போது இருபதினாயிரம் அனாதைப் பிள்ளைகள் இருப்பதாக யாழ்.செயலகத்தின் புள்ளி விபரம் எடுத்துக் கூறுகிறது. தாயை, தந்தையை அல்லது இருவரையும் இழந்த நிலையிலேயே இவ் அனாதைப் பிள்ளைகள் உள்ளனர். முன்பு சில அனாதை பிள்ளைகளுக்கான நிலையங்கள் இல்லங்கள் இயங்கி வந்தன. ஆனால் அவை யுத்தத்தினால் அழிவுற்றதால் இயங்கமுடியவில்லை. இத்தொகையான பிள்ளைகளின் எதிர்காலம் தான் என்ன?

✱ ஜனாதிபதி நியமித்த தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் சென்று திரும்பியுள்ளனர். இது முன்னேற்றகரமானதும் வரவேற்க வேண்டியதுமாகும். ஆனால் இதுவரை அவ் ஆணைக்குழுவிற்கான பிராந்திய நிலையம் அங்கு திறக்கப்படவில்லை. ஏன் இந்த காலதாமதம் என்பதே மக்கள் மத்தியிலான கேள்வியாகும்.

✱ குடாநாட்டில் ஆயுதப் படையினர் நடாத்தி வரும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் ஓய்ந்து விடவும் இல்லை. ஒழிந்து விடவும் இல்லை. அண்மைய வாரங்களில் இரண்டு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. ஒன்று நல்லூர் - நாயன்மார் கட்டில் ஒரு யுவதி இரவு காணாமல் போயுள்ளார். காலையில் கை கால் கட்டப்பட்டு மயக்கமடைந்த நிலையில் வீட்டுப் படலையில் கைவிடப்பட்டு காணப்பட்டார். இது பற்றி இரவு ராணுவ நிலையத்திற்கு முறையிடச் சென்ற வேளை துப்பாக்கி வேட்டுக்களே பதில் கூறின. பின் அவ்யுவதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

✱ கரவெட்டி கிழக்கில் மாடு மேய்க்கச் சென்ற பெண் ஒருவர் உடுப்புகள் கிழிந்த நிலையில் பற்றை மறைவில் மயங்கிக் கிடக்கக் காணப்பட்டார். பின் உறவினர்களால் அவர் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக அறியமுடிகிறது.

✱ யாழ்-குடாநாட்டில் நடாத்தப்பட்ட ஓர் ஆய்வு அங்குள்ள மக்களில் 27 வீதத்தினர் உள வடுவினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கூறுகிறது. மேலும் அவ் ஆய்வு 65 வீதமான மக்கள் ஏதாவதொரு வகை மனக் குழப்பத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டியுள்ளது. இவை போர்ச்சூழலில் நெருக்கடிகள் பாதிப்புகளின் விளைவானதே என்பதையும் மேற்படி ஆய்வு எடுத்துக் காட்டியுள்ளது. இது பற்றிய கட்டுரை பிரித்தானிய சஞ்சிகை ஒன்றில் வெளி வந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

✱ குடாநாட்டில் இடம் பெற்று வரும் புனர்வாழ்வுக் கொடுப்பனவு, புனரமைப்புக்கான ஒதுக்கீடு என்பனவற்றில் மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரையான 'பண வெட்டுகள்' இடம் பெற்று வருவதாக அரசாங்க மேல் மட்டத்திற்குப் புகார்கள் கிடைத்து வருவதாக அறியமுடிகிறது. பலநாள் திருடர் ஒருநாள் வகையாக மாட்டிக் கொள்ளவே செய்வார்கள் என்றே மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

# தன்னார்வக் குழுக்களும் சமூகச் சீரழிவுகளும்

அரசு சாரா நிறுவனங்கள் (என்.ஜீ.ஓ.) என அழைக்கப்படும் தன்னார்வக் குழுக்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. இவற்றுக்கு எங்கிருந்து பணம் வருகிறது என்று எவருக்குமே தெரியாத அளவுக்கு இவை பற்றிய விவரங்கள் வெளிவெளியாகத் தெரிவதில்லை.

மிகவும் சக்திவாய்ந்த சில அமைப்புக்கள் நேரடியாகவே அமெரிக்க சி.ஐ.ஏ. போன்ற சதிகார நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. வேறு சில இவ்வாறாக அறியப்படாதவையும் பரவலாக அரசாங்கங்களால் ஏற்கப்பட்ட ஐ.நா.சபை நிறுவனங்கள், செஞ்சிலுவைச் சங்கம் போன்றவற்றின் கிளை அமைப்புக்களாக உள்ளன. பெரும்பாலானவை உள்நாட்டில் திடீர்ப் பணம் சம்பாதிக்கத் தெரிந்தவர்களது காளான் நிறுவனங்கள் எனலாம். சாதாரண மக்களது வருமானத்தை மட்டுமன்றி உயர் உத்தியோகத்தில் உள்ளவர்களது வருமானத்தை விடவும் அதிகமான அளவில் ஊதியங்களையும் சலுகைகளையும் பிற வசதிகளையும் வழங்கவல்ல அந்நிய நிதி நிறுவனங்கள், பல புல்லுருவிகளை உருவாக்கி விட்டுள்ளனர்.

குழந்தைகளைக் காப்போம் நிதி, ஒக்ஸ்ஃபேம், தேவை மீது போர் போன்ற நன்கு அறியப்பட்ட அமைப்புக்கள் மேனாட்டு மக்களின் மனச்சாட்சியின் உறுத்தலைப் பாவித்து, நிதிதிரட்டி மூன்றாம் உலக நாடுகட்கு 'உதவி' செய்யப்பணம் திரட்டுகின்றனர். இவை போக, கிறிஸ்தவ மத நிறுவனங்களது நேரடியான அல்லது மறைமுகமான கட்டுப்பாட்டிற் செயற்படும் கிறிஸ்தவ உதவி, ஹிவொஸ் போன்ற பல நிறுவனங்கள் உள்ளன. இவற்றுக்கும் அப்பால், அரசியலில் வெளி வெளியாகவே ஈடுபடும் அமைப்புக்களும் உள்ளன. மனித உரிமை என்ற பேரில் செயற்படும் சர்வதேச மன்னிப்பு (ஏ.ஐ) நிறுவனம் பலரும் அறிந்தது. இதைவிட, சர்வதேச விழிப்பு (ஐ.ஏ) போல மறைவான அரசியல் நோக்கங்கள் கொண்ட பலவும் உள்ளன. சுற்றுச் சூழல், அணுஆயுத ஒழிப்பு போன்ற அக்கறை உடைய நிறுவனங்களில் அரசியற் தன்மை தவிர்க்க இயலாத ஒன்று.

எல்லா அயல்நாட்டுத் தன்னார்வ நிறுவனங்களும் ஒரே வகையானவையல்ல. தமது நாடுகளில் உள்ள அரசாங்கங்களது தார்மீகப் பொறுப்பைச் சுட்டிக்காட்டி அங்கும் அரசியல் பிரசாரமும் நடவடிக்கையும் எடுக்கும் அமைப்புக்கள் மிகச் சிலவே. அவை கூட வெவ்வேறு அளவுகட்குத் தங்கள் 'தேசிய' அரசியல் நெருக்குவாரங்கட்கு வளைந்து கொடுக்கும் தேவை இருக்கிறது. 1980களில் மொசாம்பிக் உணவுப் போதாமைக்கு தென்னாபிரிக்க வெள்ளை நிறவெறி அரசைக் கண்டித்து ஒக்ஸ்ஃபேம் நிறுவனம் வெகு விரைவிலேயே 'அரசியல்' பேசாது தடுக்கப்பட்டது.

உலகின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குத் தாமும் ஏதாவது செய்வது அவசியம் என்று எண்ணுகிற பலரது 'தர்ம சிந்தனை' கொஞ்சக் காசை உண்டியலில் போட்டால் போதும் என்ற கருத்துடன் நின்றுவிடுகிறது. இதன் காரணமாக, நல்ல நோக்கங்களுடன் நிறுவப்பட்ட தன்னார்வ அமைப்புகளிற் கூட ஏழை நாடுகட்கு உதவி செய்வதையே தம் பிழைப்புக்கு வழியாக்கும் நபர்களின் ஆதிக்கம் ஓங்குகிறது. அங்கு சேர்க்கப்படும் பணத்தின் பெரும்பகுதி 'நிர்வாகச் செலவினங்கட்கு' உபயோகமாகி மிஞ்சுகிற பணம் மூன்றாமுலக நாடுகட்கு வருகிறது. அங்கே உள்ள பெருச்சாளிகள் பிடுங்குவது போக, ஏனோ தானோ என்ற முறையில் சுலபமான காரியங்களைச் செய்து விட்டுப் புகைப்படம் எடுத்து அனுப்பி அன்பர்கள் எல்லாரையும் மகிழ்விக்க முடிகிறது.

திட்டமிட்டே மூன்றாமுலகில் அரசியற் போராட்டத்திற்கு ஒரு மாற்றுச் சக்தியாகத் தன்னார்வக் குழுக்களை வளர்க்கும் ஒரு போக்கு இருக்கிறது. ஃபோர்ட் ஃபவுண்டேஷன், ஈபெர்ட் ஃபவுண்டேஷன் போல நிறுவனங்கள் இத்தகைய செயல்களை ஊக்குவிப்பதில் வியப்பில்லை. இவற்றை எல்லாம் விட ஆபத்தான போக்கு எதென்றால், இந்த விதமாகக் கூரையைப் பிளந்து கொட்டுகிற பணம் சமூகத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கம் ஆகும். தன்னார்வக் குழுக்கள் தம் தொண்டர்களின் வாழ்க்கை முறையை மாற்றி மக்களிடமிருந்து அவர்களை அந்நியப்படுத்துகின்றன. இது மிகவும் தீங்கானது. இதன் துணை விளவாக தன்னார்வக் குழுக்களைப் பணங் கறப்பதற்காகவே உருவாக்கும் போக்கு தொற்று வியாதி போல சமூகத்தில் உள்ள எழுத்தாளர்கள் கலைஞர்கள், சமூகவியலாளர்கள் போன்ற பலரையும் பீடிக்கிறது. மக்கள் மத்தியில் கடுமையாக உழைத்துத் தமது பணிகளை மக்களுக்கானவையாக வளர்த்து விருத்தி செய்யும் மனநிலையின் இடத்தில், இலகுவாகக் கிடைக்கிற பணத்தைக் கொண்டு, பீச்சை போடுகிற எசமானர்களைத் திருப்தி செய்யும் மனநிலை வளர்கிறது. இவ்வாறு பிழைப்பு நடத்துகிறவர்களைப் பார்த்துச் சுதந்திரமாகச் செயலூக்கத்துடன் உழைக்கிற படைப்பாளிகள் சோர்வு அடையவும் நேருகிறது. தன்னார்வக் குழுக்களுடனும் வியாபாரிகளுடனும் அரசுடனும் இவர்கள் போட்டியிடுவது எளிதல்ல. எனவே கணிசமானோர் ஒதுங்கிப் போகவும் சிலர் சபலத்துக்காகிச் சரணடையவும் கூட நேருகிறது.

பொதுமக்களைப் பொறுத்தவரை, தன்னார்வக் குழுக்கள் அவர்களது அரசியற் போராட்ட உணர்வை மழுங்கடிக்கும் ஒரு சக்தியாகவே செயற்பட்டு வந்துள்ளனர். விலக்காக, மக்களது பிரச்சனைகள் பற்றிய தகவல்களை வழங்கி ஆய்வுகளை மேற்கொண்டு பயனுள்ள பரிந்துரைகள் செய்த ஒரு சில தன்னார்வக் குழுக்கள் உள்ளன. ஆயினும் மொத்தமாக நோக்கும் போது, தன்னார்வக் குழுக்கள் என்பன வெறும் வசதி பொறுக்கிகளை வளர்க்கும் நிறுவனங்களே என்பது உண்மை.

தன்னார்வக் குழுக்களின் வருமானம் உதவி வழங்குவோர், அவற்றின் செயற்பாடுகள், செலவுக் கணக்குகள் போன்றவை பூரண விவரங்களுடன் பொதுமக்களுக்கு எட்டக்கூடிய விதமாக வழங்கப்பட வேண்டும். யாரோ தரும் பணத்தில் தருமவான் வேடம் பூண்டு ஊரை ஏமாற்றும் நபர்கள் அம்பலப்படுத்தப்பட வேண்டும். அயலார் தயவில்லாது மக்களது சுயசார்பிலும் ஒத்துழைப்பிலும் முயற்சியிலும் செயற்படும் வெகுஜன அமைப்புக்கள் உருவாவதன் மூலமே தன்னார்வக் குழுக்களின் போர்வையில் உலாவும் திருட்டுக் கூட்டத்தை இனங்கண்டு விரட்டியடிக்க முடியும்.

இ.தி.கோணமலை.

நன்றி - நூலகத்திட்டம்



# அமெரிக்காவின் கருத்துக்கு மண்டேலாவின் பதிலடி!

நெல்சன் மண்டேலா தென் ஆபிரிக்காவின் ஜனாதிபதி. அவர் இன்று உலகத் தலைவர்களில் முக்கிய இடத்தை வகிப்பவர். நீண்ட விடுதலைப் போராளியாக தென் ஆபிரிக்கக் களத்திலே போராடி வந்தவர். அவரை ஏகாதிபத்தியத்தின் அரவணைப்போடு தென் ஆபிரிக்க சிறுபான்மை நிறவெறி அரசு சுமார் 27 வருடங்கள் சிறையில் அடைத்து கொடுமை செய்து கொண்டது. அவரைச் சிறையிட முடிந்ததே தவிர அவராலும் அவரது தோழர்களாலும் மூட்டிய விடுதலைத் தீயை எத்தகைய பிற்போக்கு சக்திகளாலும் அணைக்க இயலவில்லை. தென் ஆபிரிக்க கம்யூனிஸ்டுக்களின் முக்கிய பங்குபற்றலுடன் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆயுதப் போராட்டம் உள்ளிட்ட அனைத்து அரசியல் போராட்டங்களையும் முன்னெடுத்து வந்தது. அப்புனிதமான விடுதலைப் போருக்கு உலகில் சோஷலிஸ முற்போக்கு நடுநிலை நாடுகள் எனப்பட்ட யாவும் கரம் கொடுத்து உதவி ஒத்துழைத்தன.

அன்றைய சூழலில் அமெரிக்க ஏகாதிபத்தியம் வெள்ளை நிறவெறி ஆட்சியின் பக்கமே நின்று வந்தது. இது உலகறிந்த பரகசியம். ஏகாதிபத்தியவாதிகள் எவ்வளவு தான் விரும்பினாலும் இறுதியில் அவர்களது விருப்பத்தை மீறியே விடுதலை யுத்தங்கள் வெற்றி பெற்று நாடுகள் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டன. தென் ஆபிரிக்காவும் அதற்கு விதிவிலக்கல்ல. நீண்ட சிறைக்குப் பின் வெளிவந்த நெல்சன் மண்டேலா விரைவிலேயே தென்ஆபிரிக்காவின் கறுப்பு ஜனாதிபதியாகி வரலாறு படைத்தார்.

அத்தகைய மண்டேலா தமது நாட்டின் விடுதலைக்கு உதவிய ஒவ்வொரு நாட்டிற்கும் நன்றி செலுத்திக் கொண்டார். இன்னும் செலுத்தி வருகிறார். அண்மையில்



லிபியா நாட்டிற்கு நெல்சன் மண்டேலா பயணம் செய்து லிபியத் தலைவர் கடாபியைச் சந்தித்துப் பேசவும் நன்றி கூறவும் முடிவு செய்தார். ஆனால் இதனை அறிந்த அமெரிக்காவிற்கு பொத்திக் கொண்டு கோபம் வந்துவிட்டது. தனது தடைக்கு உட்பட்டு நிற்கும் லிபியாவிற்கு மண்டேலா பயணம் பண்ணக் கூடாது என அறிக்கை விட்டது. லிபியா சர்வதேச தடை விதிக்கப்பட்ட நாடு என்றும் அங்கே செல்வது அமெரிக்காவை அவமதிப்பதற்குச் சமம் என்றும் வெள்ளை மாளிகை வியாக்கியானம் கொடுத்தது.

ஆனால் மண்டேலா அவர்கள் அமெரிக்காவிற்கு பதிலடி கொடுப்பது போல் 'நாங்கள் எங்கே போக வேண்டும், யாரைச் சந்திக்க வேண்டும், யாரைச் சந்திக்கக் கூடாது என்று சொல்லித் தருவதற்கு எவரும் எமக்குத் தேவை இல்லை என்று கூறினார். அத்துடன் லிபியாவும் அதன் தலைவர் கடாபியும் எமது விடுதலைக்கு ஆதரவும் உதவியும் கொடுத்தவர்கள். அதே நேரம் இன்று எமக்கு ஆலோசனை முன்வைப்பவர்கள் எமது எதிரியின் பக்கத்தில் நின்று உதவியவர்கள் எனக்கூறி தனது லிபியப் பயணத்தை மேற்கொண்டார். அங்கு தலைவர் கடாபியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டார். ஒருமுறை மட்டுமன்றி தனது கொமன்வெல்த் மாநாட்டின் முடிவில் மீண்டும் லிபியா சென்று கடாபியை கண்டு பேசியுள்ளார். அச் சந்திப்பின் போது கடாபிக்கு தமது நாட்டின் உயர் விருது ஒன்றினையும் வழங்கி கௌரவித்தார். அதிலும் விஷேமானது என்னவெனில் 1986 ல் அமெரிக்க குண்டு வீச்சு விமானங்கள் அத்துமீறி லிபியாவிற்குள் புகுந்து கடாபியின் இல்லத்தைக் குண்டு வீசித் தாக்கி அதில் கடாபியின் மகன் கொல்லப்பட்ட அதே கட்டிடத்தில் தான் மண்டேலாவும் கடாபியும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினர்.

நெல்சன் மண்டேலா தனது உறுதிப்பாட்டை அமெரிக்காவின் முகத்தில் அறைந்தாற் போல் செய்து காட்டியுள்ளமை வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். அத்துடன் கறுப்பு இன மக்கள் பற்றிய இகழ்ச்சிக் கண்ணோட்டத்தை அமெரிக்கர்களும் வெள்ளைகள் பலரும் கொண்டிருப்பதையும் இத்தருணத்தில் சாடிக் கொள்ளவும் தவறவில்லை.

நெல்சன் மண்டேலாவின் அரசியல் பொருளாதாரக் கொள்கைகளில் சில விமர்சனங்கள் எழுந்திருப்பது ஒரு புறமிருக்கட்டும். ஆனால் இந்த ஆபிரிக்க தலைவரின் அமெரிக்காவிற்கு அடிபணிந்து செல்லாத இச்செயல் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வுகளுக்கு உற்சாகம் தரக்கூடியதாகும். சில மூன்றாம் உலகத் தலைவர்கள் சாஸ்டாங்கமாக அமெரிக்காவின் காலடியில் வீழ்ந்து முதுகெலும்பை வளைத்து எழுந்து நிற்கும் இவ்வேளை மண்டேலா அவர்களின் சொல்லும் செயலும் வரவேற்றுப் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

# மாபெரும் தோழர் லெனின் நாமம் நீடுவாழ்க!



இவ் ஆண்டு நவம்பர் ஏழாம் திகதி மகத்தான ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சியின் எண்பதாவது நினைவு நாளாகும். இன்றைய ரஷிய யெல்ட்சின் ஆளும் கும்பல் அந்தப் புகழ் மிக்க புரட்சியின் நினைவுச் சின்னங்களை எல்லாம் சிதைத்து சீரழிந்து புதைத்து வருகின்றது. மாஸ்கோவில் நிறுவப்பட்டிருந்த லெனின், ஸ்டாலின் சிலைகளை எல்லாம் உடைத்து அப்புறப் படுத்திவிட்டன. எஞ்சியிருப்பது மாபெரும் தோழரான லெனினின் பதப்படுத்தப்பட்ட உடலாகும். செஞ்சதுக்கத்தில் வைக்கப்பட்டுள்ள அவ் உடலையும் எடுத்துப் புதைத்து விடுவதற்கான சதி ஆலோசனைகளில் யெல்ட்சின் கும்பல் ஈடுபட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அவ்வாறு லெனின் உடல் புதைக்கப்பட்டாலும் அவரது ஒக்ரோபர் புரட்சியின் மூலமான மனித குலத்திற்கு வழங்கிய புரட்சிகர சிந்தனைகளையும் நடைமுறைகளையும் புதைத்து விட முடியாது. உலகம் பூராவிலும் உள்ள தொழிலாளி வர்க்கமும் அடக்கி ஒடுக்கப்படும் அனைத்து வர்க்கங்களும், மக்களும் லெனின் வழிகாட்டலில் முன்னேறியே தீருவார்கள். ரஷியப் பாட்டாளி வர்க்கமும் மக்களும் தற்காலிகப் பின்னடைவைப் பெற்றுள்ள போதிலும் மீண்டும் புரட்சியில் எழவே செய்வார்கள். ஒக்ரோபர் புரட்சியின் எண்பதாவது நினைவு நாளில் மாபெரும் தோழர் லெனினுக்கு எமது புரட்சிகர நினைவஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## அமெரிக்காவின் அளவு கோல்!

**அமெரிக்காவின் ஏகாதிபத்திய அரசியல் ராணுவ வர்த்தக ஏகபோக நலன்களுக்கு எதிராக யார் போராடுகிறார்களோ அவர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் ஆவார்கள். அதே வேளை தனது ஏகாதிபத்திய நலன்கள் தேவைகளுக்காக சதிகள், நாசவேலைகள், கொலைகள், ஆட்சிக் கவிழ்ப்புகள், ஆயுத விற்பனை - விரியோகங்கள் செய்வது யாவும் சுதந்திரம் - ஜனநாயகம் - மனித உரிமைப் பாதுகாப்பு ஆகும். இதுவே அமெரிக்காவின் பயங்கரவாத ஜனநாயக அளவு கோலாகும்.**

# 'இவர்' யார் ?



மாக்சியத்தை ஒரு அரசியல் தத்துவமாகவோ, பொருளாதாரத் தத்துவமாகவோ மட்டுமன்றி, வாழ்வின் அனைத்து அம்சங்களையும் தழுவக்கூடிய தத்துவமாக வளர்த்தெடுக்க வேண்டும் என்பதை இவர் வலியுறுத்தினார். அதற்கான அவரது பங்களிப்புகளையும் செய்யத் தவறவில்லை.

இவர் இத்தாலியின் தீவான சார்டினியாத் தீவில் 1891 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி பிறந்தார். இவரின் முதுகில் ஏற்பட்ட கட்டியினாலும் கூனலினாலும் இவரின் உடல் வளரவில்லை. இவரின் உயரம் ஒன்றரை மீட்டராகும்.

இவர்தான் இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான அந்தோனியோ கிராம்ஷி. இவரின் தந்தையார் ஃபாரன்செங்கோ கிராம்ஷி. 1897 ஆம் ஆண்டு நடைபெற்ற இத்தாலிய நாடாளுமன்றத் தேர்தலில் ஊழல்களில் ஈடுபட்ட ஒருவரை எதிர்த்து போட்டியிட்ட இளம் வேட்பாளரை அவர் ஆதரித்தார். அதனால் தேர்தல் முடிந்தபிறகு அவர் வேலை செய்த பதிவாளர் அலுவலக கணக்கு வழக்குகளில் முறைகேடு செய்ததாக கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

பொய்க்குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு தந்தைக்கு ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதால் குடும்பம் வறுமையாலும், வேதனையாலும் அவமானத்தாலும் நிலைகுலைந்து போனது. அதனால் கிராம்ஷியால் படிப்பை தொடர முடியவில்லை. மூன்றாம் ஆண்டுடன் படிப்பை முடித்துக் கொண்டு தந்தை வேலை செய்த பதிவாளர் அலுவலகத்தில் பைல்களை சுமக்கும் வேலைக்கு சேர்ந்தார்.

1904 ஆம் ஆண்டு தந்தையார் விடுதலையாகி வந்த பிறகு குடும்பத்தில் அமைதி நிலவியது. அவர் சிறையில் இருந்த காலத்தில் கிராம்ஷி தாயாரான பெப்பினோ மார்சியாஸ் மிகவும் கஸ்டத்துக்கு மத்தியில் அந்தோனியோ கிராம்ஷி உட்பட ஏழு பிள்ளைகளையும் காப்பாற்றி வந்தார்.

தந்தை விடுதலையாகி வந்த பிறகு கிராம்ஷி மீண்டும் படிப்பை தொடர்ந்தார். சார்டினியாவில் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சியினாலும் அரசாங்க அடக்குமுறைகளினாலும் படிப்பை முடிக்க முடியவில்லை. ஆனால் அவர் வரலாற்றையும் தத்துவங்களையும் விரும்பிப்படித்தார். அத்துடன் அவர் பல புதிய கண்டுபிடிப்புகளையும் செய்வதில் ஆர்வம் கொண்டிருந்தார்.

1906 ஆண்டிற்குப் பிறகு சார்டினியா தீவில் வேலையில்லாத்திண்டாட்டம், பசி, பட்டினி, வறுமை, காசநோய், மலேரியா என்பன தலைவிரித்தாடின. இதனால் மக்கள் கிளர்ந்தெழுந்தனர். தொழிற்சாலைகளும் அரசாங்க அலுவல்களும் தாக்கப்பட்டன. பொலிசாரும் கடற்படை வீரர்களும் பலரை சுட்டுக் கொன்றனர். நூற்றுக்கணக்கான விவசாயிகளும் தொழிலாளிகளும் அறிவு ஜீவிகளும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இக்காலகட்டத்தில் கிராம்ஷி கார்ல்மார்க்சின் கருத்துக்களையும் தெரிந்து கொள்ளத் தொடங்கியிருந்தார். சோசலிசச் சஞ்சிகைகளைப் படிப்பதில் ஆர்வம் காட்டி வந்தார். மாக்சிய தத்துவங்களை ஆழமாகப் படித்தார்.

சார்டினிய மக்கள் மீது வட இத்தாலியர்கள் மேற்கொண்ட அடக்குமுறைக்கு எதிராக சார்டினிய தேசியவாதிகள் பலமான போராட்டங்களை செய்து வந்தனர். வட இத்தாலியர்களுக்கு எதிராகப் போராடி சார்டினியா சுதந்திரம் பெற்றால்தான் அத்தீவின் வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்படும் என்று நம்பினார். ஆனால் அந்த தேசிய உணர்வில் மாக்சியக் கண்ணோட்டமும் இருந்தது.

அந்தோனியா கிராம்ஷி தேசிய விடுதலை போராட்டத்தை வர்க்கப் பார்வையுடன் முன்னெடுத்தார். 1917 ஆம் ஆண்டு சோவியத் புரட்சியின் அனுபவங்களுடன் 1920 ஆம் ஆண்டு இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். 1920 - 21 காலகட்டத்தில் இத்தாலி எங்கும் நடைபெற்ற தொழிலாளர் போராட்டத்துக்கு ஆதரவளித்ததால் 1928 இல் முசோலினியின் இத்தாலிய பாசிச ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இவர் 1937 வரை சிறைவாசம் அனுபவித்தார்.

இவர் சிறையில் இருக்கும் போது எழுதிய சிறைக் குறிப்புகள் மிகவும் பெறுமதியானவை. இவர் ஆசியாவை பற்றி மட்டுமன்றி இந்தியாவைப் பற்றி விஷேடமான அறிவையும்.நோக்கத்தையும் கொண்டிருந்தார்.

மாக்ஸ், ஏங்கல்ஸ், லெனின், மாசேதுங் என்போரின் இடத்தில் வைத்து மதிக்கத்தக்க கிராம்ஷி அவரின் நடைமுறை அனுபவங்களை தொகுத்து கோட்பாடுகளை ஆக்கியுள்ளார். கிராம்ஷி ஒரு மனிதநேயர். மாபெரும் ஆசிரியர். கருத்துக்களை பகிர்ந்து கொள்பவர். கருத்துக்களை கற்றுக் கொள்பவர். குடும்பத்தையும் நண்பர்களையும், தோழர்களையும் நேசிக்கத் தெரிந்தவர். கலைகளை ரசிக்கத் தெரிந்தவர். எல்லாவற்றுக்கும் மேலாக அவர் ஒரு மாபெரும் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர். மிகச் சிறந்த கம்யூனிஸ்ட் போராளி.

இவர் முசோலினியின் பாசிஸ பாதுகாப்பு படையினரால் சிறையில் சித்திரவதைக்குள்ளானார். இவர் 1937 ஆம் ஆண்டு விடுதலை செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் 1937 ஏப்ரல் 27 ஆம் திகதி இவ்வுலகத்திலிருந்தே விடுதலை செய்யப்பட்டார். 25 ஆம் திகதி அவரின் இரத்த நாளத்தில் ஏற்பட்ட வெடிப்பால் 27 ஆம் திகதி இறந்தார்.

நன்றி - நூலகத்திட்டம்



1ம் பக்கத் தொடர்...

# தீர்வின் அடிப்படைகள்....

இன்றைய யுத்தம் நிறுத்தப்படுவதற்கும் நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்கும், வடக்கு கிழக்கு மக்களினது இயல்பு வாழ்க்கைக்கும் அபிவிருத்தி சுபீட்சம் என்பவை ஏதாவது முன்னெடுக்கப்படுவதற்கும் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு அவசியமானதாகும். அத்தகைய நியாமான அரசியல் தீர்வை இன்று முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டம் முழுமையாகக் கொண்டுள்ளதா? என்பதே முக்கிய பிரச்சினையாகும்.

இனப்பிரச்சினைக்கு என கடந்த நாற்பது ஆண்டுகளில் முன்வைக்கப்பட்ட நான்கு தீர்வுத்திட்டங்களை விடப் பல விடயங்களில் இது முன்னேற்றகரமானது என்னும் கண்ணோட்டம் முன்வைக்கப்படுகின்றது. அதனை ஒருவகையில் ஏற்றுக் கொள்ள முடியும். ஒப்பீட்டளவில் அது உண்மையாயினும் இன்றைய நிலையிலும் எதிர்காலத்திற்கான தேவையிலும் தமிழர்களின் முழுமையான அபிலாஷைகளுக்கு இது போதுமானதாக இல்லை என்பதே புதிய பூமியின் கருத்தாகும். அதே வேளை மேற்படி தீர்வுத்திட்டத்தை ஓர் அடிப்படைக்குறியீடாகக் கொண்டு அதன் அடிப்படையில் ஓர் விரிவான பேச்சுவார்த்தையை நடாத்த முடியும்.

1995 ஆகஸ்ட் மாதத்தில் முன்வைக்கப்பட்ட தீர்வுப்பொதியில் காணப்பட்ட பல சாதகமான அம்சங்கள் வெட்டிக் குறைக்கப்பட்டுள்ளன. அதிலும் மிக முக்கியமானதொன்றாக தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் அல்லது தமிழர் தாயகம் எனப்படுவது திட்டமிட்ட வகையில் சிதறடிக்கப்படுவதற்கு தூண்டப்படுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் வழங்கப்பட்டுள்ள பிராந்தியங்களுக்கான அதிகாரங்களிலும் கட்டுப்பாடு, கண்காணிப்பு, மீளப்பெறல், கலைத்து விடல் என்பவை ஒரு கையால் கொடுத்து மறுகையால் பறித்து விடும் தன்மைகளைக் கொண்டுள்ளன. பேரினவாதிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் வளைந்து கொடுத்து இணங்கிப் போகும் போக்கில் தீர்வுத்திட்டம் அமைந்து விடக்கூடாது. யாருக்குப் பிரச்சினைகள் உண்டோ அவர்களின் கோரிக்கைகள் அபிலாஷைகளுக்குரிய அம்சங்களே தீர்வுத்திட்டத்தில் அழுத்தம் பெறல் வேண்டும். அத்தகைய அழுத்தத்தை அதில் காணமுடியவில்லை. பெயரளவில் தீர்வுத் திட்டமாகவும் நடைமுறையில் ஒருவகைக் கண்துடைப்பாகவும் சாராம்சத்தில் பேரினவாத முனைப்புகளாகவும் இருக்குமானால் அதனால் எந்தவொரு பிரச்சினையையும் தீர்த்துக் கொள்ளவியலாது.

எனவே தேசிய இனப்பிரச்சினையின் முழுமையையும் அது தோற்றுவித்திருக்கும் யுத்தத்தையும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமானால் நான்கு முக்கிய அம்சங்களின் அடிப்படையில் அரசாங்கம் தன்முனைப்புடன் செயல்படவேண்டும். ஒன்று வடக்கு கிழக்கு இணைக்கப்பட்ட பிராந்தியத்தில் வலுவான அதிகாரங்கள் கொண்ட சுயாட்சிக்கு வழி ஏற்படுத்துவது. இரண்டு அத்தகைய சுயாட்சிப் பிராந்தியத்தில் முஸ்லீம் மக்களின் தனித்துவத்தையும் தன்னடையாளங்களையும் பேணக்கூடியவாறான சுயாட்சி உள்அலகு அமைக்கப்படுதல். அதேவேளை அப்பிராந்தியத்தில் வாழும் சிங்கள மக்களுக்கான உப உள் அலகு அல்லது அமைப்பு ஏற்படுத்தப்படுதல் வேண்டும். மூன்றாவது தேசிய இனப்பிரச்சினையின் ஒரு பகுதியினராக இருந்து வரும் மலையகத் தமிழ் மக்களுக்கு வலுவான உள்ளமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு அவர்களது வர்க்க இன தனித்துவங்களும் தன்னடையாளங்களும் பேணப்படல் வேண்டும். அதே போன்று வடக்கு கிழக்கு மலையகத்திற்கு வெளியே வாழும் தமிழ் முஸ்லிம் மலையக மக்களுக்கான உபஉள் அமைப்புக்கள் உரியவாறு தோற்றுவிக்கப்படுவதற்கு ஏற்ற வழிமுறைகள் செய்யப்பட வேண்டும். நான்காவது இன்றைய தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் முதன்மைப் பிரதிநிதியாக இருந்து வரும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் அரசாங்கம் தீர்வு ஆலோசனைகள் பற்றி பேச்சுவார்த்தை நடாத்தி உரிய இணக்கப்பாட்டிற்கு வந்து கொள்வது.

மேற்குறித்த நான்கு அம்சங்களையும் மனப்பூர்வமாக கணக்கில் கொண்டு செயல்பட்டால் மட்டுமே தமிழ் முஸ்லீம் மலையக மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்று தோற்றம் பெற்று நடைமுறைச் சாத்தியம் பெற இயலும். இவற்றை முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தில் இடம் பெறச் செய்து முழுமைப்படுத்துவதற்கு உரியகாலம் இன்னும் கடந்து விடவில்லை என்பதை அரசாங்கம் நினைவில் இருத்தி செயல்பட்டாலே தீர்வுத் திட்டம் வெற்றியும் சாத்தியப்பாடும் பெறமுடியும்.

1ம் பக்கத் தொடர்...

# வரவு செலவுத் திட்டம்.

ஆனால் கண்களுக்கு தெரியாத கயிறுகள் மூலம் இவ்வரவு செலவுத் திட்டம் சுருக்குகளை வைத்திருக்கின்றது. நாட்கள் செல்லச் செல்லவே அவை மக்களை இறுக்கிக் கொள்ளும்.

இவ்வரவு செலவுத்திட்டத்தில் பற்றாக் குறையாகத் துண்டு விழும் தொகை 9858 கோடி 94 லட்சத்து 47 ஆயிரம் ரூபாவாகும். இதனை ஈடு செய்வதற்கு பல்வேறு வழிமுறைகளின் மூலம் செயல்படப் போவதாக பிரதிநிதி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் வரவு செலவுத்திட்ட உரையில் குறிப்பிட்டுள்ளார்.

இன்று உயர்ந்து நிற்கும் வாழ்க்கைச் செலவிற்கு எவ்வித நிவாரணமும் காட்டாத நிலையில் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் அதனை நிவர்த்தி செய்யலாம் என்று மட்டுமே அவர் கூறி உள்ளார். உற்பத்தி என்பதனுள் முக்கியமான எதிர்பார்ப்பாக அமைவது அந்நிய முதலீட்டுக் கம்பனிகளை பல வரிச் சலுகைகளின் மூலம் வரவழைப்பது தான். விவசாய உற்பத்தியும் அவ்விதமே எவ்வளவு காணிகளையும் அந்நியக் கம்பனிகளுக்கு வழங்குவதன் வாயிலாக உற்பத்தி இலக்கை எட்டுவது என்றே கூறப்படுகிறது. கடந்த பதினேழு வருடங்களில் இடம் பெற்று வந்ததும் அதே வகையில் எதிர்பார்க்கப்பட்டவற்றின் தொடர்ச்சியைத் தான் இவ்வரவு செலவுத் திட்டமும் எதிர்பார்த்து நிற்கிறது.

7500 ரூபாவிற்கு கீழ்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு என்பது கூட ஒரு சிறு ஆறுதலே அன்றி இன்றைய வாழ்க்கைச் செலவிற்கு சமப்படுத்தக் கூடிய ஒன்றல்ல; அதேவேளை தனியார் துறைக்கு சம்பள உயர்வு என்ற பேச்சே எடுக்கப்படவில்லை. இதனால் இலட்சக்கணக்கான பெருந்தோட்டத் தொழில்துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் கைவிடப்பட்டுள்ளனர். அவர்களது மிகக் குறைந்த சம்பளத்தைக் கொண்டு உயர்ந்து நிற்கும் வாழ்க்கைச் செலவோடு தினம் தினம் போராடி வருகிறார்கள். அவர்களின் கவனத்தைத் திருப்பவே பெருந்தோட்ட உள்ளகக் கட்டமைப்புக்கு பத்துக் கோடி வழங்குவது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோன்று வடக்கில் மீளக் குடியமர்ந்த மக்களின் அன்றாட அடிப்படைத் தேவைகளுக்காக ஒரு சதமேனும் ஒதுக்கப்படவில்லை. ஆனால் அதைச் சாட்டாக வைத்து வெளிநாட்டு உதவிகள் நிறையப் பெறப்பட்டு வருகின்றன. அங்கு யாழ் - நூல் நிலையத்திற்கு பத்துக் கோடி ரூபாய்களை ஒதுக்கியதன் மூலம் மக்களது புனர்வாழ்வுக்கான தேவைகள் வசதிகள் புறக்கணித்து கண்துடைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் யுத்தத்திற்கான செலவீனமாக 4500 கோடி ரூபாவை ஒதுக்கி அதனை மேற்செல்லாது பார்த்துக் கொள்வது எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இந் நிதி ஆண்டில் தான் யுத்தம் மேலும் முனைப்புடன் முன் செல்ல இருப்பதாக அறிய முடிகிறது. எனவே பல குறை நிரப்புப் பிரேரணைகள் மூலம் யுத்தச் செலவீனம் மேன்மேலும் அதிகரிக்கப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆதலால் யுத்தத்திற்கு மேலும் வாரி வழங்கும் நிலையிலேயே அரசாங்கம் இருந்து வருகின்றது.

அடுத்த வருடத்தில் நடைமுறைக்கு வர உள்ள பொருட்கள் சேவைகள் மீதான வரி என்பது ஒட்டுமொத்தத்தில் வாழ்கைச் செலவை மேலும் அதிகரிக்கவே செய்யும். அப்போதுதான் இந்த மக்கள் வரவு செலவுத்திட்டத்தின் 'மகத்துவத்தை' அதிகளவு காணக்கூடியதாக இருக்கும்.

இவ்வரவு செலவுத்திட்டம் உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றை அனுசரித்து அவர்களுக்கு இசைவான தொன்றாகவே தயாரிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத்திட்டத்தை முன்வைத்து நிறைவேற்றிக் கொள்வதற்காக எப்படியும் புள்ளி விபரம் காட்டி கணக்கை சரி செய்து கொள்ளலாம். ஆனால் ஏகப்பெரும்பான்மை மக்களது வாழ்க்கைத் தரமே உண்மையான பொருளாதார வளர்ச்சியைக் காட்டும் தெளிவான கண்ணாடியாக இருக்க முடியும்.

# அந்நியர் கொண்டு வந்த பகிடிவதை ஆட்கொல்லி விஷமாக மாறியுள்ளது!

வருடா வருடம் திருவிழாக்கள் நடைபெறுவது போல் பல்கலைக் கழகங்களில் பகிடிவதை என்னும் நடைமுறை நடைபெற்று வருகின்றது. அந்நிய ஆட்சியாளர்களான பிரித்தானியர் தமது ஆட்சிக் காலத்தில் இலங்கையில் பல்கலைக் கழகத்தை ஆரம்பித்த வேளையிலேயே இப் பகிடிவதையையும் தொடக்கி வைத்தனர். ஆனால் ஆரம்ப காலங்களில் இன்றைய நிலை போன்ற அநாகரிக நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. அறிமுகம், சகஜம், கூச்ச சுபாவத்தை அகற்றுதல் புரிந்துணர்வு, சூழல் இசைவு போன்வற்றுக்கான சில நடைமுறைகளாகவே பகிடிவதையின் ஆரம்ப வடிவங்கள் இருந்து வந்தன. ஆனால் வெளளையர் கொடுத்துச் சென்ற இந்த முறைமையை நமது நாட்டின் கலாச்சாரச் சூழலுக்கு ஏற்றவாறு நிச்சயம் மாற்றி அமைத்திருக்க வேண்டும். வெள்ளையர்கள் தந்து விட்டுச் சென்றவை எல்லாம் சிறந்தவை எனக் கொள்ளப்பட்டதே தவிர கொள்ள வேண்டியவற்றை ஏற்றுத் தள்ள வேண்டியவற்றை நிராகரித்திருந்தால் இன்றைய நிலை தோன்றியிருக்க முடியாது. இலவசக் கல்வி, தாய் மொழிக் கல்வி, தேசியக் கல்வி என்ற சிந்தனை ஓட்டங்கள் நடைமுறைகளோடு இணைந்ததாக இப்பகிடிவதையின் தீய நடைமுறைகள் தடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

அப்படிச் செய்யத் தவறியதன் விளைவு பகிடிவதை கொலைச் சித்திரவதை என்ற கட்டத்தை அடைந்து கொண்டது. அதற்கு அறிவுஜீவியாக வந்திருக்க வேண்டிய செ.வரப்பிரகாஷ் என்ற பொறியியல் பீட மாணவன் அநியாயமாகப் பலியாகி உள்ளான். மனித நேயம் கொண்ட எவரும் இதனைக் கண்டிக்காமல் இருக்க முடியாது. இப் பகிடிவதையால் உயிரிழந்த முதல் மாணவன் இலங்கையில் வரப்பிரகாஷ் என்று குறிப்பிடப்படும் போது அவ் அநாகரிகமான வதையால் அண்மையில் ருகுணு பல்கலைக்கழக மாணவி தற்கொலை செய்து கொண்டார். அதுவும் கொலையே யாகும். எனவே இவ்வருடத்தில் பகிடிவதையால் இரண்டு மாணவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஏற்கனவே படுகாயங்கள் பட்டு முடமாகிப் போனவர்களும் உண்டு. பகிடிவதையின் உளப்பாதிப்பால் வாழ்க்கையில் மன ஊனம் அடைந்தவர்கள் பல பேர் என்பதையும் மறந்துவிட முடியாது.

பகிடிவதை என்ற அநாகரீக நடைமுறை பல்கலைக்கழகங்களில் மட்டுமன்றி ஏனைய உயர் கல்வி நிறுவனங்களிலும் நடையாகி அண்மைக் காலங்களில் பாடசாலைகளிலும் தொடரப்படும் ஒன்றாகி உள்ளதைக் காணமுடிகிறது. எனவே ஆட்கொல்லி விஷமாக பல்கலைக் கழகம் தொட்டு பாடசாலைகள் வரை பரவி நிற்கும் பகிடி வதைக்கு இறுதியானதும் உறுதியானதுமான முடிவு கட்டப்படல் வேண்டும். அதையே சகல தரப்ப மக்களும் எதிர்பார்க்கின்றனர்.


**புதியபூமி**

**சந்தா விபரம்**

ஒரு வருடம் ரூபா 150/=
ஆறு மாதம் ரூபா 75/=
தனிப் பிரதி 10/=

வெளிநாடுகளில்
ஒரு வருடம் 25 அமெ.டொலர்
(தபால் செலவு உட்பட)

அனுப்ப வேண்டிய முகவரி
இ.தம்பையா,
S-47, 3வது மாடி,
கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட்
கொழும்பு - 11, இலங்கை


1ம் பக்கத் தொடர்...

# தோட்டக் கம்பனி...

ஆனால் தொழில் திணைக்களத்தின் பணிப்புரைகளுக்கு கூட தோட்டக் கொம்பெனிகள் மசிவதாக இல்லை.

தோட்டத் தொழிலாளர்களின் கோடிக்கணக்கான ரூபாய் சேமலாபநிதியை வைப்பிலிடாத கம்பெனிகள் எவ்வித அச்சமோ பயமோ இன்றி தங்களுடைய வியாபாரங்களை மிகவும் லாபகரமாக செய்துவிடுகின்றன.

தொழிலாளர்கள் ஏற்கனவே போராடிப் பெற்ற பல உரிமைகளை தனியார் கம்பெனிகள் மறுத்து வருகின்றன. அதிலும் மிகவும் முக்கியமான உரிமையான சேமலாபநிதி உரிமையை மறுப்பது மட்டுமன்றி தொழிலாளர்களிடமிருந்து பிடித்த பணத்தை வைப்பிலிடாமல் மோசடி செய்து வருகின்றன.

இன்று கம்பெனிகளின் முன் எமது நாட்டு சேமலாபநிதிச்சட்டமும் தொழில் திணைக்களமும் ஏன் தொழிற்சங்கங்களும் கூட செய்வதறியாது நிற்கின்றன.

தொழிலாளர்கள் தொழிற்சங்களினூடாகவே கம்பெனிகளை அணுகுகின்றனர். எனவே இவ் விடயத்தில் தொழிற்சங்கங்கள் கூடி அக்கறையுடன் நடந்து கொள்ளல் வேண்டும். தொழில் திணைக்களம் சேமலாபநிதிச் சட்டத்தை சரியாக அமுல்படுத்தி கம்பெனிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது நடைமுறையில் இருக்கும் சட்டப்பிரமாணங்களும், ஒழுங்குவிதிகளும் போதாவிட்டால் புதிய பிரமாணங்களையும், ஒழுங்கு விதிகளையும் அரசாங்கம் ஆக்க வேண்டும். தோட்டத் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 10 எம்.பிக்களும் ஏனைய தொழிற்சங்கவாதிகளின் எம்பிக்களும், அமைச்சர்களும் இது குறித்து கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYAPOOMI    පුදිය පුමි

சுற்று 04  நவெம்பர் 1997  சுழற்சி 16  பக்கம் 12  விலை ரூபா 10/=


# இரண்டு தாயகம்; ஒரு நாடு!
# ஒரு தாயகம்; இரண்டு நாடு!

இரண்டு தாயகங்கள் ஒரு நாடு; ஒரு தாயகம் இரண்டு நாடுகள் என்பதை விளங்கிக் கொண்டு இலங்கை நாட்டில் தமிழ் மக்களின் தாயகத்தை அங்கீகரிக்கும் அரசியல் தீர்வை காண வேண்டும் என்பதை வலியுறுத்தி சிங்கள மக்கள் மத்தியில் வெகுஜன எழுச்சி இயக்கங்களை முன்னெடுக்க வேண்டும் என்று ஐக்கிய இடதுசாரி கூட்டுக்கமிட்டியில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சியான நவசமசமாஜ கட்சியின் தலைவர் தோழர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் உத்தேசிய அரசியல் தீர்வை உள்ளடக்கிய அரசியல் யாப்பு பற்றி மக்கள் தொடர்பூடக நிலையம் கொழும்பு மகாவலி கேந்திரத்தில் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் பேசும்போது அவர் மேற்படி குறிப்பிட்டார்.

ஒப்பீட்டுரீதியில் இந்த அரசாங்கம் ஜனநாயகரீதியில் அரசியல் யாப்பை தயாரித்துள்ளது. அதில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான ஏற்பாடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதில் 'தமிழ் மக்களின் தாயகத்தை அங்கீகரிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். தமிழ் மக்களின் தாயகத்தை அல்லது பாரம்பரிய பிரதேசத்தை அங்கீகரிக்காவிட்டால் நாடு பிளவுபடுத்துவதை தவிர்க்க முடியாது. தமிழ் மக்களின் தாயகத்தையும் ஏற்று, சிங்கள மக்களின் தாயகத்தையும் ஏற்று இரண்டு தாயகங்கள் இருப்பதை அங்கீகரிக்காவிட்டால் நாடு இரண்டாக பிளவுபடுத்துவது தவிர்க்க முடியாது. இரண்டு தாயகங்கள் இருப்பதை ஏற்றுக் கொண்டால் நாடு பிளவுபட்டால் ஒரே நாடாக இருக்கும் என்பதை அவர் வலியுறுத்தினார்.

'இரண்டு தாயகங்கள் ஒரு நாடு' 'ஒரு தாயகம் இரண்டு நாடுகள்' என்று தோழர் விக்கிரமபாகு கூறியதை கேட்கும் போது தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது லங்காசமசமாஜக் கட்சியின் முன்னாள் தலைவர் காலஞ்சென்ற கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா கூறிய இரண்டு மொழிகள் ஒரு நாடு; ஒரு மொழி இரண்டு நாடுகள் என்று கூறியது ஞாபகம் வருகிறது.

அன்று அவர் கூறியதை (அவர் உட்பட) கணிப்பில் எடுத்திருந்தால் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து தனிநாட்டுக் கோரிக்கை பிறந்திருக்க முடியாது. சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பின் இன்றைய யுத்த அவலநிலையும் ஏற்பட்டிருக்காது.

ஆகவே தனிச் சிங்களச்சட்டம் கொண்டு வரப்பட்டதிலிருந்து இன்றுவரை ஏற்பட்டிருக்கும் நிலைமைகளை கணக்கில் எடுத்து தமிழரின் தாயகத்தை அங்கீகரித்து த்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில் தமிழர்களின் தாயகத்தை ஏற்றுக் கொள்ளத் துணிய வேண்டும்.

1995 ஆண்டு ஆகஸ்ட் மாதம் அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட தீர்வு யோசனைகளை வெட்டிக்குறைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யோசனைகள், எதையும் பெறாத அரசியல் தீர்வு காண வேண்டும் என்று தோழர் விக்கிரமபாகு கூறியிருப்பது மிகவும் சரியானதே.

இக்கருத்தை பாராளுமன்றத்துக்கு உள்ளே இருக்கும் இடதுசாரிகள் ஏற்பதாக இல்லை. அவர்களும் அவர்களின் பாராளுமன்றத்தில் தொடர்ந்து வீற்றிருக்கும் ஆசையை மட்டும் வளர்த்துக் கொள்ளாமல் இனப்பிரச்சினையை உண்மையிலேயே தீர்க்க வேண்டும் என்ற எண்ண ஏனைய தமிழ் அமைப்புகளின் யோசனைகளையும் கணக்கில் எடுக்காது தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் தீர்வு திட்ட யோசனைகள் முழுமையானவை அல்ல. அதனை கூட ஏற்காது, எதிர்க்கும் பேரினவாதிகளுக்கு எதிராக இடதுசாரிகள் செயற்பட வேண்டியது அவர்களின் தார்மீகக் கடமையாகும். பண்டா - செல்வா ஒப்பந்தத்தை 'இடதுசாரிகள் மனப்பூர்வமாக ஆதரித்து செயற்படவில்லை என்பதை விமர்சனரீதியாக அணுக வேண்டியதும் அவசியமாகும்.

ஆனால் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாத தீர்வுத்திட்டத்தை தமிழ் மக்களின் மீது திணிக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு துணை போகாமல் இருப்பதும் அவசியமாகும்.

# லிந்துலை நோனா தோட்டத்தில் பாடசாலை காணிக்காக 6 நாள் வேலை நிறுத்தம்!

லிந்துலை நோனா தோட்டத்தில் **20x40** அடிப்பரப்பளவை கொண்ட ஒரு பழைய கட்டிடத்தில் ஆண்டு ஆறுவரை கொண்ட தோனா தோட்ட தமிழ் வித்தியாலயம் இயங்கி வருகின்றது. இப்பாடசாலையில் இத்தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகள் 300 க்கும் மேற்பட்டவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பாடசாலைக்கு போதிய இடவசதியின்மையை அறிந்த சீடா செயற்திட்டம் ஒரு புதிய கட்டிடத்தை கட்டிக் கொடுக்க முன்வந்தது.

ஆனால் இக்கட்டிடத்தை அமைப்பதற்கு தோட்ட நிருவாகம் காணி வழங்க மறுத்துவிட்டது. இதற்கெதிராகவும் நமது பிள்ளைகளின் எதிர்கால கல்வி நிலையை நிச்சயிற்பதற்காகவும் கடந்த ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 6 ம் திகதி வரை இத்தோட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்த போராட்டம் ஒன்றை நடாத்தினர்.

அம்மாதம் 6 ம் திகதி உயர்கல்வி பிரதி அமைச்சர் உட்பட இரண்டு பாராளுமன்ற தமிழ் உறுப்பினர்களும் இத்தோட்டத்துக்கு அருகே உள்ள பெரிய பசுமலை தோட்டத்தில் புதிதாக கட்டப்பட்ட பாடசாலையை திறந்து வைப்பதற்காக வருகை தந்திருந்தனர். இவர்களை இடை மறித்த இத்தோட்ட தொழிலாளர்கள் காணி பெற்று தருமாறு கேட்ட போது அந்த இரண்டு பாராளுமன்ற தமிழ் உறுப்பினர்களும் ''வேலை நிறுத்தம் எல்லாம் சும்மா, நீங்கள் எல்லாம் நாளைக்கு வேலைக்கு போங்க'' எங்களுக்கு 14 நாள் மாத்திரம் அவகாசம் கொடுங்க. இது சம்பந்தமாக பாராளுமன்றத்தில் பேசி இரண்டில் ஒரு முடிவு காண்போம் அப்படி அவங்க கொடுக்கலனு சொன்னா நாங்களே வந்து இந்த தேயிலையை பிடுங்கி தாரோம்'' என்று வீரவசனம் பேசி அவ்விடத்தை விட்டு நழுவிவிட்டனர். அதற்கு பிறகு எத்தனையோ 14 நாட்கள் வந்தும் இது சம்பந்தமாக அவர்களின் பேச்சையும் காணவில்லை. மூச்சையும் காணவில்லை. இப்படி எத்தனையோ ஆயிரக்கணக்கான 14 நாட்கள். நமது சமூகம் இவர்களைப் போன்றவர்களை நம்பி காத்திருந்த ஏமாந்து விட்டதையும் நமது பிள்ளைகளின் எதிர்கால கல்வி நிலையையும் எண்ணி இத்தோட்ட மக்கள் ஏக்க பெருமூச்சி விட்ட வண்ணம் இருக்கின்றனர்.

இந்த இருபாராளுமன்ற தமிழ் உறுப்பினர்கள் சார்ந்த தொழிற் சங்கத்துக்கு இத்தோட்ட தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் 15 ரூபா வீதம் மாதாந்தம் 4500 ரூபாவுக்கு மேல் சந்தா பணமாக செலுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையை கட்டுவதற்கு காணி வழங்க கூடாது என்று முட்டுக்கட்டை போடுபவர் பம்பர கெல கரூப் முகாமையாளர் **J.V.P.**சமரசேகர அவர்களே. இவர் இப்பாடசாலையில் இடம் இல்லை என்றால் அருகில் புதிதாக கட்டப்பட்ட பாசாலைக்கு பிள்ளைகளை அனுப்பி விட்டு இப்பாடசாலையை மூடி விடுங்கள். இத்தோட்டத்தில் தேயிலைகள் நல்ல விளைச்சலைத் தருகின்றது அதை பிடுங்கினால் கம்பனிக்கு நட்டம் ஏற்படும் என்கின்றார். தோட்டங்களை கம்பனிக்கு தாரைவார்த்து கொடுப்பதில் மேற் சொன்ன பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒத்தாசை வழங்கியது குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையை கட்டுவதற்கு காணி கிடைக்குமா? இத்தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளின் எதிர்கால கல்வி நிலை நிச்சயிக்கப்படுமா? என்பது இன்னும் கேள்விக் குறி!

# தமிழ் வாலிபருக்கு ஒரு லட்சம் நஷ்டஈடு!
# உயர் நீதிமன்றம் தீர்ப்பு

7.3.1996 ல் கொழும்பில் கைது செய்யப்பட்டவர் ரட்ணசபாபதி மோகனதாஸ். தகுந்த காரணங்கள் எதுவும் கூறப்படாது தமிழர் என்ற ஒரே காரணத்திற்காகவே இவ்வாலிபர் சி.டி.பி. பொலிசாரால் கைது செய்யப்பட்டதன் அதன் தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டு கொடும் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டார். கைகால்கள் கட்டப்பட்டு தலை கீழாகத் தொங்க விடப்பட்டு மோசமாக அடிக்கப்பட்டார். அவரது ஆண் உறுப்பும் விதைகளும் நசித்து சேதமாக்கப்பட்டுள்ளன. பெற்றோல் நிரப்பப்பட்ட பையை முகத்தில் முகரச் செய்தமையால் கண்கள் பழுதடைந்துள்ளன. இவற்றை மருத்துவப் பரிசோதனைகள் உறுதிப்படுத்தியுள்ளன. அதே வேளை அவரிடமிருந்து பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலமே அவருக்கு எதிரான ஒரே ஒரு ஆதாரமாகும்.

இந்நிலையிலே தனது நிலையை விளக்கி உயர்நீதிமன்றத்தில் இவ்வாலிபர் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கினைத் தொடுத்தார். இதனை விசாரணைக்கு எடுத்த உயர் நீதிமன்றம் அவ்வாலிபருக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகளைக் கவனத்தில் கொண்டும், சட்டத்திற்கு அப்பாற்பட்ட வகையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையை கருத்தில் எடுத்தும் அரசாங்கம் ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கி உள்ளது. அத்துடன் வழக்குச் செலவாக ஐயாயிரம் ரூபா மேலதிகமாக வழங்கவும் தீர்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இவ் வாலிபர் மீது மொத்தம் பன்னிரண்டு வழக்குகள் போடப்பட்டுள்ளது எனவும் அறிய முடிகிறது. அவையாவற்றுக்கும் உள்ள ஒரே ஒரு ஆதாரம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமாகவே உள்ளது என நீதிமன்றத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வழக்கு பொலிசாரது அடிப்படை மனித உரிமை மீறல்களுக்கு ஒரு பதச் சோற்று உதாரணமாகும். முதலில் தமிழர் இரண்டாவது இளைஞர் என்பதற்காகவும் தமது கைகளில் பயங்கரவாதத் தடைச் சட்டம் இருக்கிறது என்னும் அதிகாரத் துணிவிலுமே இது போன்ற மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருகின்றன. இதனால் மோகனதாஸ் போன்று எத்தனை தமிழர்கள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். தமக்குக் கிடைத்த இரகசியத் தகவல் என்ற சாட்டில் ஒன்றுமறியாத தமிழ் இளைஞர்கள் மட்டுமன்றி வயதானவர்களும் கூட கைது செய்யப்பட்டு பல மாதங்கள் நீதிமன்றத்தில் நிறுத்தாது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நீண்ட காலத்திற்கு விடுதலையும் இன்றி விசாரணையும் இல்லாது உடல் உளச் சித்திரவதைகளுடன் சிறைகளில் இருந்து வருவோரது நிலை பயங்கரமானதாகும். வெளியில் உள்ள அவர்களது குடும்பத்தினரது அன்றாட வாழ்வின் பன்முகத் துயரங்கள் விபரிக்கவியலாதவையாகும்.

சில மாதங்களுக்கு முன்பு இவ்வாறு தடுத்து வைத்திருப்பவர்கள் விசாரிக்க மேலதிக நீதிமன்றம் ஒன்று உருவாக இருப்பதாக நீதி அமைச்சர் தெரிவித்திருந்தார். எல்லாம் வெறும் கதை தானா என்றே தடுத்து வைத்திருப்போர் கேட்க வேண்டியுள்ளது. எனவே தடுத்து வைத்திருக்கும் தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும் அல்லது விசாரணை செய்ய வேண்டும். இதனையே எல்லோரும் வற்புறுத்துகிறார்கள்.

வெளியிடுபவர் : இளையதம்பி தம்பையா, இல14, 57வது ஒழுங்கை, கொழும்பு -06, பிரசுரம்: நவமக அச்சகம், 334 காலி வீதி இரத்மலானை.